பக்கங்கள்: 13

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2055 தை 06 ஞாயிற்றுக்கிழமை 19.01.2025 கதிர் 072

# அரசமைப்பு உருவாக்கம் பற்றி ஆராய சுமந்திரனை உள்ளடக்கி எழுவர் குழு

## நியமித்தது தமிழ் அரசுக் கட்சி

**ஜனாதிபதி அநுரகுமார திசநாயக்கவின் ஆளும்தரப்புபுதியஅரசமைப்புமுயற்சிகளை தொடங்குமாக இருந்தால் அதனைக் கையாள்வதற்கெனதமிழ்அரசுக்கட்சிசார்பில் அதன்முன்னாள்நாடாளுமன்றஉறுப்பினரும் அயலுறவுத்துறை செயலாளருமான சுமந்திரனையும்உள்ளடக்கிகட்சித்தலைவர் தலைமையில் 7 பேர் கொண்ட குழு ஒன்றை நியமித்துள்ளது.அத்தோடுபுதியஅரசமைப்பு உருவாக்க முயற்சிகளை இந்த ஆளும்தரப்பு விரைந்து தொடங்கவேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளது.**

**இலங்கைத்தமிழ்அரசுக்கட்சிஇறுதியாக கோட்டாபய ராஜபக்ச ஆளும்தரப்பின் நிபுணர்குழுவிற்கு சமர்ப்பித்த அரசமைப்பு வரைவினை அடிப்படையாகக் கொண்டு மேலதிக உள்ளடக்கங்கள் தொடர்பில் இந்த 7 பேர் குழு ஆராயும் என்றும் கட்சி அறிவித்துள்ளது.**

**கட்சிமட்டத்திலும்துறைசார்ந்தநிபுணர்கள் மட்டத்திலும்ஆராய்ந்துமேம்பட்டவரைவினை இறுதி செய்ததன் பின்னர் அடுத்த கட்டமாக தமிழ்த் தேசியப் பரப்பில் உள்ள ஏனைய கட்சிகளுடன் இது குறித்துப் பேசும்** ☞ 2

## இனி அது ரகசியம் அல்ல!

அநுர ஆட்சி முன்வைக்கவுள்ள புதிய அரசமைப்பு முயற்சியில், வடக்கு முன்னாள் முதலமைச்சர் விக்னேஸ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள் பேரவை முன்வைத்த அரசமைப்பு வரைவை அடிப்படையாகக் கொண்டு ஒரு முன்மொழிவைத் தயாரித்து அதன் மூலம் தமிழினத் தலைமையைத் தன் கைவசப்படுத்த தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் தமிழ் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் எடுத்த முயற்சிக்கு தமிழ் அரசுக் கட்சி தனது பாணியில் முதல் ஆப்பைச் செருகி இருக்கிறது.

இந்தவிவகாரத்தில்இதுவரையில் நாடாளுமன்றஉறுப்பினர்சிறீதரனே கஜேந்திரகுமாருடன் பேசி வந்தார். முதலில் சிறீதரனுடன் தனியாகவும் பின்னர் நாடாளுமன்றத்தில் கட்சிகளின் நாடாளுமன்றக் குழுத் தலைவர்கள் என்ற கோதாவில் ஒரு தடவையும் கூடி இது குறித்திப் பேசியிருந்தார்கள். மீண்டும் ஜன. 25 இது குறித்துப் பேச ☞ 2

# ஆலயங்கள் இருக்கும் இடங்களை விடுவிக்க நடவடிக்கை எடுப்பேன்

## புத்தசாசன அமைச்சர் உறுதியளிப்பு

ஆலயங்கள்மற்றும்அவைஅமைந்துள்ள விடுவிக்கப்படாதநிலங்கள்உள்ளிட்டவற்றை விரைவில்விடுவிப்பதற்குநடவடிக்கைகளை எடுப்பேன் என்று புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் பேராசிரியர் ஹினிதும சுனில் செனவி தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்டம், தெல்லிப்பழையில் நடைபெற்றதேசியதைப்பொங்கல்நிகழ்வில் பங்குபற்றுவதற்காகசென்றிருந்தபுத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் பேராசிரியர் ஹினிதும சுனில் செனவி மற்றும் பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் பிரதி ☞ 8

செலவு அறிக்கை தராத காரணத்தால்

# தேசியப் பட்டியல் வேட்பாளர்கள் 74 பேருக்கு எதிராகவும் வழக்கு

## தேர்தல்கள் ஆணைக்குழு அறிவிப்பு

கடந்த பொதுத் தேர்தலில் அரசியல் கட்சிகளின் தேசியப் பட்டியலில் இடம்பெற்றிருந்த வேட்பாளர்களில் தமது செலவு அறிக்கையை ☞ 8

# மின் கட்டணக் குறைப்பு நடைமுறைப்படுத்தப்படும்

## அமைச்சர் உறுதியளிப்பு

பொதுப் பயன்பாடுகள் ஆணைக் குழுவால் பரிந்துரைக்கப்பட்ட 20 சதவீத மின்சாரக் கட்டணக் குறைப்பு நடைமுறைப்படுத்தப்படும் என எரிசக்தி அமைச்சர் பொறியியலாளர் குமார ஜயக்கொடி நேற்றுப் பிற்பகல் உத்தியோகபூர்வமாகத் தெரிவித்தார்.

மின்சாரக்கட்டணத்தைஜனவரிமுதல் குறைப்பதில்லை என்று ஆளும்தரப்பு முன்னதாகத்தீர்மானித்திருந்தது. ஆனால் பொதுமக்கள் கருத்துக்கேட்புடன் 20 சதவீதம் வரையான மின் கட்டணக் குறைப்புக்கு பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழு பரிந்துரைத்திருந்தது. வெள்ளிக்கிழமைஇந்தப்பரிந்துரை முன்வைக்கப்பட்டது. ☞ 8

# மருந்து உற்பத்தித் திறனை உடன் அதிகரிக்க அமைச்சர் உத்தரவு

இலங்கையின் மருந்து உற்பத்தித் திறனை துரிதமாக அபிவிருத்தி செய்வதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் டொக்டர் நலிந்த ஜயதிஸ்ஸ அரச மருந்துக் கூட்டுத்தாபனத்திற்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

மக்களின் சிகிச்சைக்கான வைத்தியசாலைக் கட்டுமானங்களை மேற்கொள்வது மற்றும் சுகாதாரத் துறைக்கு அத்தியாவசியமான மருந்துகளை தொடர்ச்சியாக வழங்குவது என்பன பல்வேறு காரணிகளால் சவாலாக மாறியுள்ளதாக ☞ 2

# அபாயகரமான குற்றங்களை தடுக்க விசேட அதிரடிப் படையினர் களத்தில்

அபாயகரமான குற்றச்செயல்களை கட்டுப்படுத்துவதற்காக உடன் அமுலுக்கு வரும் வகையில் நாடளாவிய ரீதியில் விசேட அதிரடிப்படையினர் களமிறக்கப்பட்டுள்ளதாக பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற அலுவல்கள் அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்தார்.

ஆண்டில் முதல் 16 நாட்களில் 5 துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் நிகழ்ந்துள்ள நிலையில் இத்தகைய சம்பவங்கள் மூலம் பறிக்கப்படும் மனித உயிர்களைக் பாதுகாப்பதற்கு உடனடியாக நடவடிக்கைகளை எடுக்குமாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச ஜனாதிபதி அநுர குமாரவிடம் பகிரங்க கோரிக்கைவிடுத்திருந்தார். இதுதொடர்பாகவினவியபோதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

பொதுப் பாதுகாப்பு விடயத்தில் பொலிஸார் தீவிரமான நடவடிக்கைளை முன்னெடுத்து வருகின்றார்கள். பொதுமக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அண்மைய நாட்களில் தனிப்பட்ட விரோதம் மற்றும் போதைப்பொருள் வியாபாரத்துடன் தொடர்புடையவர்கள் தான் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களுக்கு இலக்காகியுள்ளனர்.

போதைப்பொருள் வியாபாரம் மற்றும் கடத்தல்களை கட்டுப்படுத்துவதற்கு விசேட நடவடிக்கைகளைஆளும்தரப்புமுன்னெடுத்து வருகின்றது. அந்த நடவடிக்கைகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படும் என்பது உறுதியான விடயமாகும்.

மன்னார் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் சம்பந்தமான விசாரணைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. சம்பவத்துக்கு பயன்படுத்தப்பட்ட துப்பாக்கிகள் மீட்கப்பட்டுள்ளன, சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அத்தோடு குறித்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தினைதடுப்பதற்குமுடியாதுபோனமை தொடர்பில் பொலிஸாரை மையப்படுத்திய விசாரணைகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்றார்.

# நாடாளுமன்ற உயிரதிகாரிகளிடம் சிஐடி துருவித்துருவி விசாரணை

## நீதி அமைச்சரின் முறைப்பாடு தொடர்பில்

நாடாளுமன்றஇணையதளத்தில்நீதி அமைச்சர்ஹர்ஷனநாணயக்காரவின் பெயருக்கு முன்னால் கலாநிதி பட்டம் குறிப்பிடப்பட்டிருப்பது தொடர்பில் நாடாளுமன்ற சட்டவாக்க சேவைகள் பணிப்பாளரிடம் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் இரண்டாவது தடவையாகவும் விசாரணை நடத்தி வாக்குமூலத்தைப் பதிவு செய்துள்ளது.

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தால் பாராளுமன்ற சட்டவாக்க சேவைகள் பணிப்பாளர் ஜயலத் பெரேராவுக்கு வழங்கப்பட்ட அறிவித்தலுக்கு அமைய, அவர் அங்கு முன்னிலையாகி வாக்குமூலம் வழங்கியுள்ளார்.

ஜயலத்பெரேராகுற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில்ஆஜராவதுஇது ☞ 8

# உள்ளூராட்சித் தேர்தலை தாமதித்தால் திரும்ப நீதிமன்றை நாடவேண்டிவரும்

## 'பவ்ரல்' அமைப்பு எச்சரிக்கை

நீதிமன்றத்தில் ஆட்சேபனை முன்வைக்கப்பட்டாலன்றி, உள்ளூராட்சிமன்றத் தேர்தலை காலம் தாழ்த்துவதற்கு வேறு எந்த வாய்ப்பும் இல்லை. எனவே புதிய வேட்புமனுவைக் கோருவதற்கு ஜன. 23 வரை நீதிமன்றத்தில் ஆட்சேனபனை தாக்கல் செய்யப்படாவிட்டால் சட்டத்தை நிறைவேற்றி ஏப்ரல் முதல் வாரத்தில் தேர்தலைநடத்தவேண்டும். அவ்வாறில்லைஎன்றால் மீண்டும் நீதிமன்றத்தை நாட வேண்டியேற்படும் என 'பவ்ரல்' அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

பப்ரல் அமைப்பு உள்ளூராட்சிமன்றத் தேர்தல் தொடர்பில் நீதிமன்றத்தை நாடி தீர்ப்பையும் பெற்றுக் கொண்டுள்ளது. எவ்வாறிருப்பினும் பழைய வேட்புமனுக்கமைய தேர்தல் நடத்தப்பட்டால் அதில் சிக்கல்கள் ஏற்படும் என்பதை அனைவரும் அறிவர். அதற்கமைய பழைய வேட்புமனுவை இரத்து செய்து, புதிய வேட்புமனுவைக் கோரி அதற்கமைய தேர்தலை நடத்துவதற்கு அனைவரும் இணக்கம் தெரிவித்துள்ளனர்.

இதன் மூலம் புதிதாக சுமார் நான்கரை ☞ 8

# உப்பு இறக்குமதி ஆரம்பம்

உப்பு இறக்குமதியை ஆரம்பித்துள்ளதாக அரச வணிகக் கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது.

அதற்கமைய அடுத்த வாரமளவில் 15,000 மெற்றக் தொன் உப்பை இறக்குமதி செய்ய முடியுமென கூட்டுத்தாபனத்தின் பொது முகாமையாளர் சமிலா இத்தமல்கொட தெரிவித்துள்ளார்.

இந்தியாவிடமிருந்து உப்பு இறக்குமதியை மேற்கொள்வதற்காக 2 இறக்குமதியாளர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

அத்துடன்குறித்தஇறக்குமதிஉப்பை தொழிற்றுறையினருக்கு ☞ 8

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

கஜேந்திரகுமார் நாள் குறித்திருந்தார். இந்தக் கூட்டத்திற்கு சிறீதரன் மற்றும் செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் தம்மோடு தமது கட்சியிலிருந்து யாரையும் அழைத்து வரலாம் என்றும் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில் நேற்றுக் கூடிய தமிழ் அரசுக் கட்சியின் மத்திய குழு அரசமைப்புத் தொடர்பான முயற்சிகளைக் கையாள 7 பேர் கொண்ட குழு ஒன்றை நியமித்துள்ளது. இந்தக் குழுவில் முக்கியமாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் உள்வாங்கப்பட்டுள்ளார். கட்சித் தலைவர் சிவஞானம், கட்சியின் செயலரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சத்தியலிங்கம், நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிறீதரன் மற்றும் சாணக்கியன் ஆகியோரும் உள்வாங்கப்பட்டுள்ளனர். இவர்கள் தவிர கிழக்கிலிருந்து துரைராஜசிங்கமும் வடக்கிலிருந்து சயந்தனும் குழுவில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இனிவரும் காலங்களில் இந்தக் குழுதான் அரசமைப்புத் தொடர்பான விவகாரங்களைக் கையாளும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. ஆக மொத்தத்தில் ஜனவரி 25 கஜேந்திரகுமார் கூட்டிய கூட்டத்திற்குச் செல்வதாயின் இந்தக் குழுவினரே செல்லவேண்டும். ஆனால், ஜன. 25 கூட்டம் குறித்து தமிழ் அரசுக் கட்சியின் மத்திய செயற்குழுவில் எதுவும் ஆராயப்படவில்லை. கஜேந்திரகுமாரின் அழைப்புக் குறித்து கூட்டத்தில் பிரஸ்தாபிக்கப்பட்டபோதும், அவரது கடந்த காலச் செயற்பாடுகளின் அடிப்படையில் அதற்கு ஆதரவான கருத்துக்கள் கிடைக்கவில்லை. தமிழ் அரசுக் கட்சியைத் துரோகியாகக் காட்டுவதில்தான் அவர் முனைப்போடு இருப்பார் என்ற விடயம் அங்கு முக்கியமாகச் சுட்டிக்காட்டப்பட்டது. அதனால் ஜனவரி 25 கூட்டத்தில் இந்தக் குழுவினர் பங்கேற்பதற்கான சாத்தியங்கள் இல்லை.

அதுவும்போக, இந்த எழுவர் குழுவில் சிறீதரன் தவிர மற்றைய 6 பேரும் ஓரணியாகக் கூடியவர்கள் அதாவது ஒத்த கருத்துச் சிந்தனைப் போக்குடையவர்கள். எனவே சிறீதரன் - கஜேந்திரகுமார் இணையின் போக்குக்கு இவர்கள் இழுபடுவதற்கான சாத்தியங்கள் பெரிதுமில்லை. அதுவும்போக, தமிழ் அரசுக் கட்சி ஏற்கனவே ரணில் காலத்தில் ஒரு புதிய அரசமைப்பு வரைவை உருவாக்குவதில் பங்கேற்று அதற்கு ஆதரவும் தெரிவித்திருக்கும் நிலையில், ரெலோ மற்றும் புளொட் ஆகியன அந்த அரசமைப்பு வரைவுக்கு இணக்கமும் தெரிவித்திருந்த நிலையில் இப்போது அந்த வரைபை முற்றாக நிராகரிப்பதன் நியாயம் குறித்தும், ஏக்கிய ராஜ்ஜியம் உட்பட இப்போது மீண்டும் கிளறப்படும் விடயங்கள் தொடர்பில் ஏற்கனவே கட்சியால் விளக்கங்கள் அளிக்கப்பட்டுள்ளமை குறித்தும் நேற்றைய கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இவற்றின் அடிப்படையில் கோட்டாபய ராஜபக்சவின் ஆட்சிக் காலத்தில் அவரால் நியமிக்கப்பட்ட அரசமைப்பு வரைவு தயாரிப்புக் குழுவிடம் தமிழ் அரசுக் கட்சி முன்வைத்த வரைவில் காலத்தேவைக்கு ஏற்ப வல்லுநர்களுடன் கூடிப் பேசி தேவையான திருத்தங்களைச் செய்து, அவற்றின் அடிப்படையில் முன்னேற முடியும் என்ற தீர்மானத்தின் அடிப்படையிலேயே இதற்கென 7 பேர் கொண்ட குழுவும் நியமிக்கப்பட்டது.

அதன் அர்த்தம் என்னவென்றால், கஜேந்திரகுமார் கூறுவதைப் போன்று தமிழ் மக்கள் பேரவையின் அரசமைப்பு வரைபை முன்னிறுத்தி புதிய அரசமைப்பு முயற்சிகளை எதிர்கொள்வதற்கு தமிழ் அரசுக் கட்சி தயாராக இல்லை என்பதுதான். மக்கள் ஆணை தம்மிடமே இருக்கும் நிலையில் தமது அரசமைப்பு வரைவுக்கு ஆதரவாகச் செயற்படுவதாக இருந்தால், அந்த விடயத்தில் தமிழ் அரசோடு ஏனையவர்கள் இணைந்து வருவதாக இருந்தால் மட்டும் சேர்ந்து செல்வதற்குத் தமிழ் அரசு தயார் என்பதுதான்.

ஆக மொத்தத்தில் ஜனவரி 25 கூட்டம் கஜேந்திரகுமார் மற்றும் அவராலும் அவரது கட்சியினாலும் கடந்த பொதுத் தேர்தல் வரைக்கும் துரோகிகளாகவும் ஒட்டுக்குழுக்களாகவும் ஆளும் தரப்புக்கு விலைபோனவர்களாகவும் பார்க்கப்பட்ட ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கும் இடையிலான கூட்டுக்கான பேச்சாக மட்டுமே இருக்கும் என்று தோன்றுகின்றது. ஒருவேளை இந்தக் கூட்டத்திற்கும் நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் செல்லக்கூடும். ஆனால், இனி இது விடயத்தில் அவரால் கட்சிக்குள் செல்வாக்குச் செலுத்த முடியும் என்று நான் நம்பவில்லை. இப்போதைக்கு அவர் தறிகெட்டு ஓடிவிடாமலிருக்க அவருக்குக் கடிவாளம் இடும் இடத்தில் கட்சிதான் இருக்கிறதே தவிர, அவரது விருப்புக்கு கட்சியை வளைக்கும் வல்லமையுடன் அவர் இல்லை என்பது மட்டும் திண்ணம்.

இந்த விடயமே நீண்டுவிட்டதால் கூட்டத்தில் பேசப்பட்ட மற்றைய விடயங்கள் குறித்து நாளை விரிவாகப் பகிர்ந்துகொள்கின்றேன்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## அரசமைப்பு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் நேற்றுத் திருகோணமலையில் நடந்தபோது இந்த முடிவுகள் எடுக்கப்பட்டன. கூட்டம் காலை 10 மணியிலிருந்து மாலை நான்கு மணி வரையில் கட்சித் தலைவர் சிவஞானம் தலைமையில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளை கட்சியின் பேச்சாளர் ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன் செய்தியாளர்களிடம் தெரிவித்தார். அவர் தெரிவித்ததாவது,

உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் நடத்தப்படவுள்ளது. ஏற்கனவே தாக்கல் செய்யப்பட்ட வேட்பு மனுக்களை இரத்துச் செய்து புதிதாக வேட்பு மனுக்கள் ஏற்றுக்கொள்ளச் செய்கின்ற சட்டமூலம் நாடாளுமன்றத்தில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த நிலையில் இந்தத் தேர்தலில் தமிழ் அரசுக் கட்சி எப்படி இந்தத் தேர்தலை எதிர்கொள்வது என்று வேட்புமனுக்களை எவ்வாறு தாக்கல் செய்வது என்பது குறித்து முக்கியமாகக் கலந்துரையாடினோம். ஏற்கனவே எமது கட்சியில் போட்டியிட வேட்பு மனுத்தாக்கல் செய்தவர்களுக்கு முன்னுரிமை வழங்குவது என்று தீர்மானிக்கப்பட்டது. குறிப்பாக எமது கட்சியில் வேட்பாளர்களாக களமிறங்கியவர்கள் தேர்தல் வேலைகளை ஆரம்பித்து பரப்புரைகளையும் செய்யத் தொடங்கியிருந்தார்கள்.

அரச விடுமுறை எடுக்க வேண்டியவர்கள் விடுமுறைகளை எடுத்திருந்தார்கள். புதிதாக வேலைக்கு இணைய வேண்டியிருந்தவர்கள் வேட்பாளர்களாக இருந்தமையால் அவர்களுக்கு வாய்ப்பு கிடைக்காது போயிருந்தது. இதனால் அவர்களின் பணிகள் சம்பந்தமாக சிக்கல்கள் ஏற்பட்டிருந்தன. அவ்விதமானவர்களுக்கு கட்சி மீண்டும் முன்னுரிமை அளித்து வேட்புமனுக்களை வழங்குவதென்று தீர்மானித்துள்ளது.

உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் இரண்டு வருட கால இடைவெளியின் பின்னர் மீண்டும் நடைபெறவிருக்கின்றமையால் ஏற்கனவே வேட்புமனுக்களில் பெயரிடப்பட்டவர்களில் உயிரிழந்தவர்கள், நாட்டைவிட்டு வெளியே சென்றவர்கள், மாற்றுக் கட்சிக்களுக்கச் சென்றவர்கள் எனப் பலர் இருக்கின்றார்கள். அப்படியானவர்கள் தொடர்பில் முழுமையான ஆய்வினை தொகுதிகள் மற்றும் மாவட்ட ரீதியாக மேற்கொண்டு அதன் பின்னர் பிரதியீடுகளைச் செய்யவேண்டியுள்ளது. பிரதியீடுகளைச் செய்கின்றபோது இளைஞர், யுவதிகளுக்கு கூடுதலான சந்தர்ப்பத்தினை வழங்கவேண்டும் என்று தலைவர் விநயமாகக் கேட்டுக்கொண்டுள்ளார். அவ்விடயம் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

அதற்கு மேலதிகமாகக் கட்சி சம்பந்தமான வழக்குகள் தொடர்பில் ஆராயப்பட்டுள்ளது. ஒரு வழக்கு பெப்ரவரி 13க்கும், மற்றொரு வழக்கு மார்ச் 20க்கும் திகதியிடப்பட்டுள்ளது. அதேநேரம், குறித்த வழக்குகளை தீர்ப்பது சம்பந்தமாக எழுத்துமூலமான எனது யோசனை மத்திய குழுவிற்கு கடந்த ஆண்டு ஜூன் மாதம் சமர்ப்பிக்கப்பட்டு ஜூலையில் அதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனினும் ஏனைய தரப்பினரின் சட்டத்தரணிகளால் அந்த விடயம் முழுமையாக ஏற்றுக்கொள்ளப்படாமையில் இன்னமும் வழக்குகள் இழுபறியாகவுள்ளது. ஆகவே ஏனைய தரப்பினரும் மத்திய செயற்குழு அனுமதியளித்த விடயத்தினை ஏற்றுக்கொண்டால் வழக்குகளை முடிவுக்கு கொண்டுவர முடியும்.

வழக்கு தாக்கலின் அடிப்படை என்னவென்றால் கடந்த வருடம் ஜனவரி 21 மற்றும் 27 ஆகிய இரு தினங்களிலும் பொதுச்சபை கூட்டப்பட்டபோது, பொதுச்சபையின் சேர்க்கை தவறானதாக இருந்திருக்கின்றது. கட்சி யாப்பின்படி பொதுச் சபையின் எண்ணிக்கை ஆகக் கூடுதலாக 156 பேராக இருந்திருக்கவேண்டிய நிலையில் அதன் எண்ணிக்கை 346 பேராக இருந்தது என்பதுதான்.

ஏற்கனவே சேனாதிராஜா, சிறிதரன், யோகேஸ்வரன் உள்ளிட்டவர்கள் பொதுச்சபை தொடர்பில் வழக்காளியின் கோரிக்கையை ஏற்று நிவாரணம் அளிப்பதென்று எழுத்துமூலமாக நீதிமன்றத்துக்கு அறிவித்துள்ளனர். அதேபோன்று, நான் உள்ளிட்டவர்கள் பொதுச்சபை கூட்டியது சரியானதென்றும் எனினும் வழக்கினை முடிவுக்கு கொண்வருதற்காக ஏனைய தரப்பினருடன் இணைந்து வழக்காளிக்கான நிவாரணத்தை அளிப்பதென்றும் இணங்கியுள்ளோம்.

இதனை நடைமுறைப்படுத்தினால் வழக்கினை முடிவுக்குக் கொண்டு வரமுடியும். ஆகவே வழக்கினை நீடித்துக்கொண்டிருப்பதான குற்றச்சாட்டுக்களை ஏற்றுக்கொள்ள முடியாது. மத்திய செயற்குழுவின் தீர்மானத்தினை அமுலாக்குவதற்கு இணங்காதிருப்பவர்களையே அக்குற்றச்சாட்டுக்கள் சாரும்.

கட்சியின் மூலக்கிளைகளுக்கான ஆயுட்காலம் நிறைவடைந்தால் அந்தக் கிளைகளைப் புதிப்பிப்பது என்று கடந்த கூட்டங்களில் அதுபற்றி ஆராய்ந்து தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி தேர்தலிலும், நாடாளுமன்றத் தேர்தலிலும் கட்சியின் தீர்மானத்துக்கு எதிராகச் செயற்பட்டவர்கள் சம்பந்தமாக ஒழுக்காற்று நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளோம். அதற்காக அந்தந்த மாவட்டங்களில் இருந்து முறைப்பாடுகளை பெற்றுக்கொண்டு அடுத்தகட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது. முதலில் அவர்களிடத்தில் விளக்கம் கோரப்பட்டு அடுத்த நடவடிக்கைளை முன்னெடுப்போம்.

நாடாளுமன்றத் தேர்தலில் கட்சிக்கு வெளியே சென்று வேறு சின்னங்கள், சுயேச்சைகளில் போட்டியிட்டவர்களை வர்த்தமானியுடன் ஒப்பிட்டுப்பார்த்து அவர்களை நீக்குவதற்கு முடிவினை எடுத்துள்ளோம். அவர்களுக்கான அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளது.

அரசியல் தீர்வு சம்பந்தமாக தமிழ்க் கட்சிகள் சேர்ந்து உரையாடுவது சம்பந்தமாக கூட்டத்தில் பிரஸ்தாபிக்கப்பட்டது. அந்த அடிப்படையில் கடந்த காலங்களில் கட்சியால் தயாரித்து முன்வைக்கப்பட்ட அரசமைப்புக்கான வரைவுகள் உள்ளிட்ட விடயங்கள் சம்பந்தமாகவும் கவனம் செலுத்தப்பட்டது.

எமது கட்சி உருவாக்கப்பட்டதே ஆட்சிமுறைமை மாற்றத்துக்காகவாகும். அதனை அடைவதே எமது இலக்காகவுள்ளது. சமஷ்டிக்கட்சி என்ற பெயரைக்கொண்ட நாங்கள் சமஷ்டித்தீர்வொன்றையே வலியுறுத்துவோம். அதனையே முன்னகர்த்துவோம்.

காலத்துக்காலம் அரசமைப்புச் செயற்பாடுகள், அதிகாரப் பகிர்வுச் செயற்பாடுகள் உள்ளிட்டவற்றில் நாங்கள் பங்குபற்றியுள்ளோம். இறுதியாக 2020ஆம் ஆண்டு டிசெம்பர் 20 தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக அன்றைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவின் நிபுணர்கள் குழுவிற்கு எமது தீர்வுத் திட்டத்தினை அனுப்பியுள்ளோம். 2021இல் நாம் அந்தத் திட்டத்தினை நிபுணர்கள் குழுவிடத்தில் சமர்ப்பித்துள்ளோம். அந்த அடிப்படையில் குறித்த திட்டத்தினை அடிப்படையாகக் கொண்டு எம்மத்தியில் உள்ள நிபுணத்துவம் வாய்ந்தவர்களிடமிருந்தும் ஆலோசனைகள் பெறப்படவுள்ளன.

அதற்காக ஏழுபேர் கொண்ட குழுவொன்று கட்சியின் பதில் தலைவர் சிவஞானம் தலைமையில் நியமிக்கப்பட்டுள்ளது. அக்குழுவில் கட்சியின் பொதுச்செயலாளர் சத்தியலிங்கம், சிறிதரன், சுமந்திரன், சாணக்கியன், துரைராஜசிங்கம், சயந்தன் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இக்குழுவினர் தீர்வுத்திட்டம் சம்பந்தமாக ஆராய்வினைச் செய்து அடுத்தகட்ட நடவடிக்கைகளை முன்னெடுப்பார்கள். அதன் பின்னர் இக்குழுவினரே தமிழ்த் தேசியப் பரப்பில் உள்ள ஏனைய கட்சியினருடன் பேச்சுக்களில் ஈடுபட்டு அடுத்தகட்ட நடவடிக்கைகளில் பங்கேற்பார்கள் என்றார்.

# கிளிநொச்சியில் அபிவிருத்தி குறித்து இளைஞர்கள் ஜனாதிபதிக்கு கடிதம்

## பல்வேறு திட்டங்கள் முன்வைப்பு

கிளிநொச்சி மாவட்டத்தில் உடனடி மாற்றங்களை ஏற்படுத்தித் தருமாறு தமிழ்த் தேசிய இளைஞர் பேரவை ஜனாதிபதிக்கு கடிதமொன்றை அனுப்பியுள்ளது.

தமிழ்த் தேசிய இளைஞர் பேரவையின் பொதுச் செயலாளர் ச.ஸ்டீவென்சன் (கீதன்) இக்கடிதத்தை அனுப்பிய பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்டுள்ளார்.

அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு -

கிளிநொச்சி மாவட்டம் யுத்தத்தால் நலிவடைந்து வளர்ந்துவரும் மாவட்டம் என்பது தாங்கள் அறிந்ததே. இம்மாவட்டத்தின் நகர அபிவிருத்தியில் உடனடியாக செய்து கொடுக்கவேண்டிய விடயங்களை தங்களிடம் முன்வைக்கிறோம்.

1. கிளிநொச்சியில் பரந்தன் சந்தி, டிப்போ சந்தி, கரடிபோக்கு சந்தி, காக்காக்கடைச்சந்தி மற்றும் வைத்தியசாலை முன்பாக மின்விளக்குச் சமிக்ஞை அமைக்கவேண்டிய தேவையுள்ளது.

2. பரந்தன் முதல் பல்கலைக்கழக சந்தி வரை இருவழிப் பாதையை அமைக்கவேண்டிய தேவை உள்ளது.

3. நகர்ப் பகுதிகளில் உள்ள பாதசாரி கடவைகளில் தெரு விளக்குகளை அமைத்துத் தரவேண்டியுள்ளது.

4. பரந்தன் முதல் பல்கலைக்கழக சந்தி வரை தெரு விளக்குகளை ஏ9 வீதியில் அமைத்துத் தரவேண்டிய தேவையுள்ளது.

5. கிளிநொச்சி நகரில் சுற்றுவட்டம் ஒன்றை அமைத்து, மணிக்கூண்டுக் கோபுரம் ஒன்றையும் அமைத்து நகர வசதிகளை ஏற்படுத்தி தாருங்கள்.

மேற்படி விடயங்களை மேற்கொண்டு தருவதன் மூலம் போக்குவரத்து நெரிசல் மற்றும் விபத்துக்களைத் தவிர்க்க முடியும் என எதிர்பார்த்து இந்த கோரிக்கை விடுக்கிறோம்.

பொருத்தமான நடவடிக்கை எடுத்து, மாவட்டத்தில் மேலதிக அபிவிருத்திகளை செய்ய நடவடிக்கை எடுத்து உதவுமாறு கோருகின்றோம் என அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## மருந்து ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

இரத்மலானையில் அமைந்துள்ள இலங்கை அரச மருந்து உற்பத்திக் கூட்டுத்தாபனம் (ஸ்ரீஊணனிஸீ) எதிர்கொள்ளும் சிக்கல்கள் குறித்த களஆய்வின்போது அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

மருந்து வழங்குநர்கள் இல்லாமை, டெண்டர் விடப்பட்ட சப்ளையர்களால் தொடர்ந்து மருந்துகள் வழங்கப்படாமை, உலகளாவிய பிரச்சினைகளால் விநியோக வலையமைப்பின் சீர்குலைவு போன்ற காரணங்களால் அரச வைத்தியசாலைகளுக்குத் தொடர்ச்சியாக மருந்துகளை விநியோகிக்க முடியாதுள்ளதாக அமைச்சர் சுட்டிக்காட்டினார். சில மருந்துகளுக்குப் பற்றாக்குறை இருப்பதையும் அவர் குறிப்பிட்டுக் கூறினார்.

இந்தக் கள ஆய்வின்போது இலங்கையில் மருந்துகளின் உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்குத் தேவையான மூலப்பொருட்களை விரைவாக இறக்குமதி செய்வதில் உள்ள சிக்கல்கள் குறித்து விரிவாகக் கலந்துரையாடப்பட்டது, அந்தக் குறைபாடுகளைக் களைந்து விரைவாக மருந்து உற்பத்தியைத் தொடங்குவது குறித்து கலந்துரையாடலில் அவதானம் செலுத்தப்பட்டது.

காலைக்கதிர் Kalaikkathir

# எதிர்க்கட்சித் தலைவரை சந்தித்தனர் ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகள்

இலங்கைக்கான ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுவர் உள்ளிட்ட ஐரோப்பிய ஒன்றிய தேர்தல் கண்காணிப்பாளர்கள் நேற்று (சனிக்கிழமை) எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவை சந்தித்தனர்.

இச்சந்திப்பில், இலங்கை மற்றும் மாலைதீவுகளுக்கான ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுவர் கார்மென் மொரேனோ, இலங்கை மற்றும் மாலைதீவுகளுக்கான ஐரோப்பிய ஒன்றிய தூதுக்குழுவின் பிரதி பிரதானி லார்ஸ் பிரெடல் மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதான கண்காணிப்பாளராக செயற்படும் நாச்சோ சான்செஸ் உள்ளிட்ட தரப்பினர் கலந்து கொண்டனர்.

இரு தரப்புக்கும் இடையே சமூக, பொருளாதார மற்றும் அரசியல் விவகாரங்கள் பல குறித்து நீண்ட கருத்துப் பரிமாற்றம் இடம்பெற்றது.

இங்கு, 2024 ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் ஐரோப்பிய ஒன்றிய தேர்தல் கண்காணிப்பாளர்களால் நடத்தப்பட்ட தேர்தல் கண்காணிப்பு அறிக்கை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவிடம் கையளிக்கப்பட்டது.

இச்சந்திப்பில், ஐரோப்பிய ஒன்றியத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் தேர்தல் கண்காணிப்பு தலைமை செயற்பாடு அதிகாரி ஜோஸ் இக்னாசியோ சான்செஸ் அமோர், பிரதி பிரதம கண்காணிப்பாளர் இன்டா லேஸ், சட்ட ஆய்வாளர் ஆன் மார்ல்பரோ, அரசியல் ஆய்வாளர் ரால்ப் மைக்கல் பீட்டர்ஸ் ஆகியோரும், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுடன் ஐக்கிய மக்கள் சக்தியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எரான் விக்ரமரத்னவும் கலந்து கொண்டனர்.





## கடலில் மிதந்த நிலையில் பெண்ணின் சடலம் மீட்பு



அம்பலாங்கொடை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட ரன்தொம்பே குடாகலபுவே பகுதியில் கடலில் மிதந்த நிலையில் பெண்ணொருவர் வெள்ளிக்கிழமை பிற்பகல் சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என அம்பலாங்கொடை பொலிஸார் தெரிவித்தனர்.

கடலில் சடலம் ஒன்று மிதப்பதாக அம்பலாங்கொடை பொலிஸாருக்கு தகவல் கிடைத்துள்ளது.

இதனையடுத்து, சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் சடலத்தை மீட்டு கரைக்கு கொண்டு சென்றுள்ளனர்.

சடலமாக மீட்கப்பட்டவர் தொஜ ூடர்பில் இதுவரை எந்தவித தகவல்களும் கிடைக்கவில்லை எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்நிலையில், சடலமானது பலப்பிட்டி ஆதார வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை அம்பலாங்கொடை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## குப்பைகளை சுத்தம்செய்தால் மட்டும் தூய்மையான இலங்கை ஆகிவிடாது

### கிழக்கு ஆளுநர் எடுத்துரைப்பு

(அபு அலா)

தூய்மை இலங்கை (கிளின் ஸ்ரீலங்கா) திட்டம் குறித்த ஊழியர்களுக்கான விழிப்புணர்வு செயலமர்வு கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜெயந்த லால் ரத்னசேகர தலைமையில் திருகோணமலை ஆளுநர் செயலகத்தில் இடம்பெற்றது.

இந்த செயலமர்வின்போது ஆளுநர் பேராசிரியர் ஜெயந்த லால் ரத்னசேகர தெரிவிக்கையில் -

தூய்மை இலங்கை (கிளீன் ஸ்ரீலங்கா) திட்டம் வெறும் குப்பைகளை சுத்தம் செய்வது மட்டுமல்ல, சுற்றுச்சூழல், சமூக மற்றும் மனப்பான்மை மேம்பாட்டை உள்ளடக்கிய ஒரு நீண்டகால திட்டமாகும். இத்திட்டத்தை சரிவர நாம் மட்டுமல்ல எமது நாட்டிலுள்ள அனைவரும் கடைப்பிடித்தால் மாத்திரமே அதில் வெற்றிகொள்ள முடியும். அதற்கான சகல செயற்திட்டங்களை நாட்டின் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க முன்னெடுத்து வருகின்றார். - என்றார்.







## இடமாற்றக் கொள்கைகளினால் பாதிக்கப்படும் அதிபர், ஆசிரியர்களுக்கு உடனடித் தீர்வு தேவை

### யாழ். மாவட்ட எம்.பி. வலியுறுத்து



வடக்கு மாகாணத்தில் நிலையற்ற இடமாற்ற கொள்கைகள் காரணமாக ஆசிரியர்கள், அதிபர்கள் மற்றும் பிரதி அதிபர்கள் பல்வேறு நெருக்கடிகளை சந்தித்து வருவதாக யாழ்ப்பாண மாவட்ட தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் லயன் றஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து பல ஆண்டுகளாக இடமாற்றங்கள் வழங்கப்படாமல் இருந்தும், சிலர் இடமாற்றங்களுக்காக நீண்டகாலமாக காத்திருப்பதன் மூலம் குடும்ப வாழ்க்கை மற்றும் சேவை துறைகளில் பாதிக்கப்படுகின்றனர் என அவர் தெரிவித்தார்.

இடமாற்றங்கள் தகுதி மற்றும் விண்ணப்பதாரர்களின் தேவைகளுக்கு ஏற்ப சரியான முறையில் வழங்கப்பட வேண்டும். குறிப்பாக, அரசியல் தலையீடு மற்றும் பாரபட்சம் இன்றி இடமாற்றங்களை நடைமுறைப்படுத்துவது அவசியம். மேலும், பல பாடசாலைகளில் அதிபர்கள் இல்லாமை காரணமாக கல்வி தரத்திலும் நிர்வாக சீர்குலைவு காணப்படுகிறது. - என்று அவர் கவலையை வெளிப்படுத்தினார்.

காலைக்கதிர் Kalaikkathir

நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# அணுகுமுறையின் தெளிவு

அரசுத் தலைவர் அநுரகுமார திசநாயக்க கடந்த ஆண்டு இறுதியில் இந்தியாவிற்குச் சென்றார். அவரது முதலாவது வெளிநாட்டுப் பயணம் அது. இலங்கைத் தலைவர்களின் பாரம்பரியம் மாறாது அவரது தனது முதல் அயலுறவுப் பயணமாக இந்தியாவிற்கே சென்றார். எனினும் அவரது அடுத்த பயணம் சீனாவிற்கானதாக இருந்தது. இந்தப் பிராந்தியத்தில் ஆதிக்கம் பெற முயலும் இந்த இரு பெரும் நாடுகளிற்கும் மத்தியிலான இலங்கையின் பயணத்தை அவரது அடுத்தடுத்த பயணங்கள் தெளிவாகக் காட்டி நிற்கின்றன.

இந்த வாரம் அவர் பெய்ஜிங் சென்று சீன அரசுத் தலைவர் ஷி ஜின்பிங்கை சந்தித்தார். இந்தச் சந்திப்புத் தொடர்பில் ஜனாதிபதி ஊடகப் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில், 'புதிய அபிவிருத்தி சகாப்தத்தை' முன்வைப்பதில், இலங்கையுடன் நெருக்கமாகச் செயற்பட சீனாவின் தயார்நிலையை, சீன அரசுத் தலைவர் உறுதிப்படுத்தினார் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

இலங்கை கடினமான காலங்களில் பயணித்துக்கொண்டிருக்கும் வேளையில், சீனாவின் இந்த வார்த்தைகள் கொழும்புக்கு மிகவும் ஆறுதலானவை. அதுமட்டுமல்லாமல் அம்பாந்தோட்டையில் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் ஒன்றை நிறுவுவதற்கான ஒப்பந்தமும் இந்தப் பயணத்தில் கைச்சாத்திடப்பட்டது. இந்தத் திட்டம் ரணில் விக்கிரமசிங்க ஆட்சிக் காலத்திலிருந்தே பேசப்பட்டுவந்த ஒன்றுதான் என்றபோதும், இப்போது அது கைச்சாத்திடப்பட்டிருக்கின்றது. சீனாவின் உலகப் புகழ்பெற்ற பெரு நிறுவனங்களின் தலைவர்களுடனும் அரசுத் தலைவர் பேச்சு நடத்தியுள்ளார். இலங்கையில் முதலிடுவது தொடர்பில் இந்தச் சந்திப்பில் ஆராயப்பட்டுள்ளன.

இலங்கையில் முதலீடு உள்ளிட்ட உதவிகளை வழங்குவதில் சீனா தயக்கம் காட்டியதில்லை. கொழும்பு ஒரே சீனக் கொள்கையை ஆதரிக்கும் நிலையில் இலங்கையிலும் சீனாவிற்கு இனப்பிரச்சினை ஒரு பொருட்டல்ல, அதனால் கொழும்புக்கு தாராளமாக உதவிகளை வழங்குவதற்கு அது தயாராகவே உள்ளது. கடந்த காலங்களிலும் பெய்ஜிங் இதே அணுகுமுறையையே கடைப்பிடித்தது. தற்போதைய ஆளும்தரப்பும் இடதுசாரி பாரம்பரியத்தில் வந்தது என்பதால் சீனாவின் ஆதரவு அதற்கு இன்னும் அதிகமாகக் கிடைக்கும் வாய்ப்புகளும் உள்ளன.

சீனாவின் இந்த இணக்கமும் நெருக்கமும் மேற்கு மற்றும் இந்தியாவிற்குச் சிக்கலானவை என்பது கண்கூடு. அதனால் அவையும் இலங்கையை மேலும் செல்லப்பிள்ளையாகவே நடத்தும் என்கிற கொழும்பின் அணுகுமுறை புவிசார் அரசியலின் ஆபத்தான விளையாட்டுக்களில் ஒன்று. இருந்தாலும் அதன் மூலம் பெரும் பயன்கள் கிடைக்கும் என்பதே இலங்கையின் எதிர்ப்பார்ப்பு. அதற்கேற்பவே அநுரவின் இந்திய சீனப் பயணங்கள் அமைந்திருந்தன. இருப்பினும் இந்த அணுகுமுறை சில சமயங்களில் கொழும்புக்குப் பேராபத்தாக அமையக்கூடிய சந்தர்ப்பங்களையும் மறுக்க முடியாது.

பல நாடுகளைப் போல் இலங்கையிடம் 'வெளிநாட்டுக் கொள்கை ஆவணம்' இல்லை – அல்லது வெளியுலகம் எம்மைப் படித்து புரிந்து கொள்ளக்கூடிய எழுத்துப்பூர்வமான வெளியுறவுக் கொள்கைப் பத்திரம் இல்லை. இலங்கை வெளிவிவகாரக் கொள்கை ஆவணமோ, தேசிய பாதுகாப்பு/பாதுகாப்பு கொள்கை வெள்ளை அறிக்கையோ வெளியிடவில்லை. ஆனால், தனது அயலுறவுக்கொள்கை 'சமச்சீர் கொள்கை' என்று இலங்கை பறைசாற்றிக்கொள்கிறது. அதாவது எந்தப் பக்கமும் சாயாத கொள்கை.

இந்தியா, சீனா, அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் போன்ற பெரும் வல்லரசுகளுடன் சமமான உறவுகளைப் பேணுவதன் மூலம் இந்தக் கொள்கை பின்பற்றப்படும் என்பது கொழும்பின் கருத்து. ஆனால் இந்த சமநிலைத் தராசு சில சமயம் ஒரு பக்கமாக மெல்லச் சாய்ந்தபோதெல்லாம் அதன் விளைவுகளை இலங்கை ருசிபார்த்துள்ளது. இந்தப் பின்னணியில் அநுர ஆட்சியாலும் தொடர்ந்தும் இந்தக் கொள்கையிலேயே பயணிக்க முடியுமா என்பதே இப்போதுள்ள கேள்வி.

அதனுடைய தற்போதைய நிலை அது சீனா பக்கம் சாய்வதற்கான அதிக ஏதுநிலைகளைக் கொண்டிருக்கின்றபோதும் சமநிலை சாத்தியமானதா? அதற்கா திடமான கொள்கைத் திட்டம் அதனிடம் இருக்கின்றதா என்பதுதான்?

இதற்கு மூலோபாய சுயாட்சியைப் பாதுகாக்கவும், உலகளாவிய அன்னிய நேரடி முதலீட்டை ஈர்க்கவும் எந்த ஒரு நாட்டையும் அதிகமாகச் சார்ந்திருப்பதைத் தவிர்க்கவும் கூடிய கொள்கைத் திட்டங்கள் வேண்டும் என்கிறார்கள் வல்லுநர்கள். இலங்கையின் அயலுறவுக் கொள்கை தொடர்பான ஆவணங்கள் இல்லாமை இதற்கொரு முக்கிய காரணம்.

2025 இல் சர்வதேச அரங்கின் மாறிவரும் உறவுகளுடன், மற்றும் 1960 கள் மற்றும் 70 களில் இருந்ததை விட இலங்கை மிகவும் மாறுபட்ட இடத்தில் இருக்கிறது என்பதைப் புரிந்துகொண்டு ஆட்சியாளர்கள் முன்னருவார்களா?

# பிரேமதாசவிடமிருந்து கற்றுக்கொள்ளலாம்

**உபுல் யோசப் பெர்னான்டோ**

1988 ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்ற பின்னர், ரணசிங்க பிரேமதாச தனக்குக் கிடைத்த ஆணையை 'இரு தலைக் கொள்ளி'க்கு ஒப்பானது என்று விவரித்தார். இதன் மூலம், அவர் குறிப்பிட்ட இரட்டை சவால்கள், வடக்கில் மோதல் மற்றும் தெற்கில் ஜே.வி.பி. கிளர்ச்சி. அந்த நேரத்தில், மரபு வழிப் போராக இந்த இரண்டுமே தீவிரமடைந்திருக்கவில்லை என்றாலும், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் இலங்கைஇராணுவத்தின்கட்டுப்பாட்டில் இல்லாமல் வெளிநாட்டு (இந்தியா) இராணுவத்தன்கட்டுப்பாட்டில்இருந்தன.

தனது தேர்தல் பரப்புரையின்போது,



பிரேமதாச வடக்கு மற்றும் கிழக்கில் இருந்துஇந்திய அமைதிகாக்கும்படையை (ஐபிகேஎப்) வெளியேற்றுவேன் எனவும், இந்திய-இலங்கைசமாதானஒப்பந்தத்தை நட்பு ஒப்பந்தமாக மாற்றுவேன் என்றும், ஜேவிபியுடன் பேச்சு மூலம் தெற்கில் சமாதானத்தை ஏற்படுத்துவார் எனவும் உறுதியளித்தார். இருப்பினும், இந்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவது கிட்டத்தட்ட சாத்தியமற்றதாக அவருக்குத் தோன்றியது. பிரபாகரனும் விடுதலைப் புலிகளும் இந்திய - இலங்கை அமைதி ஒப்பந்தத்தை நிராகரித்ததால், இந்திய அமைதிப் படையினரைத் திரும்பப் பெறுவது கற்பனை செய்ய முடியாததாக அவருக்குத் தோன்றியது.

பிரபாகரனையும் விடுதலைப் புலிகளையும் நிராயுதபாணியாக்கவே இந்திய இராணுவம் இலங்கையில் நிறுத்தப்பட்டது. இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின்படி, பிரபாகரன் ஆயுதங்களை ஒப்படைக்கும்வரை அல்லது புலிகள் தோற்கடிக்கப்படும்வரை இந்தியப் படைகள் நாட்டில் இருக்கவேண்டும். அந்த நேரத்தில், எந்த முடிவும் அடையக்கூடியதாகத் தெரியவில்லை. இந்திய இராணுவத்தை இலங்கையை விட்டு வெளியேறும் யோசனைநிறைவேற்றப்படக்கூடியதாக அப்போதைக்குத் தோன்றவில்லை.

இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை நட்புறவு ஒப்பந்தமாக மாற்ற இந்தியாவைவற்புறுத்தவேண்டியிருந்தது. எவ்வாறாயினும், கையெழுத்திட்ட ஒப்பந்தத்தை மறுபரிசீலனை செய்ய இந்தியாவை சம்மதிக்க வைப்பது எளிதான காரியமல்ல.

அடுத்த பெரும் சவாலக இருந்தது சமாதானத்தை ஏற்படுத்துவதாகும். ஜேவிபியின் ஆயுதங்களைக் களைந்து அதனுடன் பேச்சு நடத்துவதன் மூலமே அதைச் செய்யவேண்டியிருந்தது. அந்த நேரத்தில் இவை எல்லாவற்றையும் செய்ய முடியும்என்பதுநம்பக்கூடியதாக இருக்கவில்லை. அதற்கு இருந்த ஒரே மாற்றுவழி, ஆயுத வழியில் ஜேவிபிக்கு அதிர்ச்சி வைத்தியம் அளிப்பது. ஜே.ஆர்.ஜயவர்த்தனஇந்தவழியைத்தான் பின்பற்றினார். ஆனால் அவரால் வெற்றிபெற முடிந்திருக்கவில்லை.

ஜே.ஆர். அல்லது பிரேமதாசா அல்லது ஐக்கிய தேசியக் கட்சியால் இந்திய துருப்புக்களை வெளியேற்றவோ, இந்திய - -இலங்கை ஒப்பந்தத்தை முறிக்கவோ அல்லது சமாதானத்தை ஏற்படுத்தவோ முடியாது என்பதே ஜேவிபியினதும் சுதந்திரக் கட்சியினதும் வாதமாக இருந்தது. சுதந்திரக் கட்சியால் அல்லது ஜேவிபியால் தலைமை தாங்கி நடத்தப்படக்கூடிய ஆளும் தரப்பு ஒன்றால் மட்டுமே இவையெல்லாம் சாத்தியமாக்கக்கூடும் என்று அவை உறுதியாக நம்பின. அதே கருத்தை மக்களும் நம்புவதற்கான காரணம் இருந்தது. பிரேமதாச பிரதமராக இருந்தபோது அவரது ஐதேகட்சியினால் இந்திய - இலங்கை ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டிருக்கையில் இந்திய இராணுவத்தை வெளியேற்றுவது ஐதேகவாலோ அதன் தலைவர்களாலோ முடியாத காரியம் என்று மக்களும் நம்பினர்.

மேலும், ஜே.வி.பி கிளர்ச்சிக்கு பெரும்பாலும் ஐதேக ஆட்சியின் தவறுகளே காரணம். ஐக்கிய தேசியக் கட்சி மீண்டும் ஆட்சிக்கு வந்தாலும் ஜேவிபியை அதனால் திறம்பட அடக்கிவிட முடியும் என நம்ப பலரும் தயாராக இருக்கவில்லை. ஆனாலும் பிரேமதாச தேர்தலில் வெற்றி பெற்றார். வெற்றிக்குப்பிறகு, தேர்தல்வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில் உள்ள சிரமங்களை அவர் ஒப்புக்கொள்ளவில்லை. மாறாக, அமைதியாக அவற்றை அடைவதற்கான உத்திகளை வகுத்தார்.

அவரது நிறைவேற்ற முடியாத வாக்குறுதிகளில் ஒன்று ஜனசவிய திட்டம். முன்னாள் நிதியமைச்சர் ரொனி டி மெல் உட்பட விமர்சகர்கள், உலக வங்கி

தொடர்ச்சி 5ம் பக்கம்...........

காலைக்கதிர் Kalaikkathir

# பிரேமதாசவிடமிருந்து...

4ம் பக்கத் தொடர்ச்சி...........

இதற்கு நிதியளிக்காது என்று கூறினர். எனினும், பிரேமதாச ஒரு கணக்கீட்டு விளையாட்டை விளையாடினார். இந்திய இராணுவத்தை அகற்றுவதற்கு விடுதலைப் புலிகளை பேச்சு மேசைக்குக் கொண்டு வரவேண்டும் என்பதே அந்தக் கணக்கு. இலங்கையில் வெளிநாட்டுப் படைகள் தேவையில்லை என்பதை இந்தியாவுக்கு உணர்த்தவேண்டும் என்பதை அவர் உணர்ந்தார். இராஜதந்திரம் மற்றும் அழுத்தத்தைப் பயன்படுத்தி - இந்திய இராணுவத்தை வெளியேற்ற முடியவில்லை என்றால் தற்கொலை தாக்குதல் அச்சுறுத்தல் மூலம் இந்தியப் படைகளைத் திருப்பி அனுப்ப அவர் உத்தி வகுத்தார். இந்த நடவடிக்கையானது இந்திய இராணுவத்தை ஒரு தேசிய அச்சுறுத்தலாகக் கருதிய ஜேவிபி மற்றும் சுதந்திரக் கட்சி ஆகியவற்றை வாயடைக்கச் செய்தது.

பிரேமதாசா இந்திய - இலங்கை உடன்படிக்கையை நட்புறவு ஒப்பந்தமாக மாற்றும் நோக்கில் மீண்டும் பேச்சு நடத்துவதற்கான முயற்சிகளையும் ஆரம்பித்தார். அதேநேரத்தில், அவர் ஜேவிபியையும் கையாண்டார். அவர்களைப் பேச்சுக்கு அழைத்தார். தனது தலைமையை நம்பும்படி அவர்களை வலியுறுத்தினார். ஜே.வி.பி மறுத்தபோது, பிரேமதாசா அவர்களின் கிளர்ச்சியை அடக்கி, தெற்கில் வெற்றிகரமாக அமைதியை மீட்டெடுத்து, தனது அரசியல் எதிரிகளை ஆச்சரியத்தில் ஆழ்த்தினார்.

ரொனி டி மெல்லின் கூற்றுக்களையும் அவர் எதிர்கொண்டார், ஜனசவிய திட்டத்திற்கான அறிக்கையைத்தயாரிப்பதற்காக ஒருதிறமையான குழுவை அமைத்தார், அதன் மூலம் இறுதியில் உலக வங்கியின் நிதியைப் பெற்றார். பிரேமதாசா படுகொலை செய்யப்பட்ட நேரத்திலும், இந்திய-இலங்கை ஒப்பந்தத்தில் திருத்தம் செய்ய இந்தியாவுடன் பேச்சு நடத்திக் கொண்டிருந்தார்.

நாடு பெரும் குழப்பத்தில் இருந்தபோதே பிரேமதாச இந்தச் சாதனைகளை நிகழ்த்தினார். அந்தத் தருணத்தில் வெளிநாட்டு துருப்புக்கள் தேசத்தின் ஒரு பகுதியை ஆக்கிரமித்தன, அரச நிறுவனங்கள் முடங்கியிருந்தன, ஊரடங்குச் சட்டம் தொடர்ந்து இருந்தது, பொருளாதாரம் சீர்குலைந்திருந்தது. ஆயினும்கூட, ஒரு வருடத்திற்குள், அவர் மோதலின் தீப்பிழம்புகளை அணைத்தார். தைத்த ஆடைத் தொழிலில் 100 திட்டங்களைத் தொடங்கினார், கொக்கலா சுதந்திர வர்த்தக வலயத்தை நிறுவினார், தெற்கு அதிவேக நெடுஞ்சாலைக்கு ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து நிதியைப் பெற்று, அதை சுதந்திர வர்த்தக வலயத்துடன் இணைக்கும் திட்டங்களை வகுத்தார். அவர் சுற்றுலாவை புதுப்பிக்கவும், வேலை வாய்ப்புக்களை உருவாக்கவும், வெளிநாட்டு நாணய இருப்புக்களை அதிகரிக்கவும், கண்டலமா போன்ற கிராமங்களையும் ஹோட்டல்களையும் கட்டினார்.

பிரேமதாசா இன்று ஜனாதிபதியாக இருந்திருந்தாரானால், சர்வதேச நாணய நிதியத்தின் உடன்படிக்கை குறித்து மீண்டும் பேச்சு நடத்தியிருப்பார். சர்வதேச நாணய நிதியத்தின் கடனை இலங்கைக்கு சாதகமாக மறுசீரமைப்பதற்கும், மிகவும் பாதிக்கப்படக்கூடியவர்களுக்கு உடனடி நிவாரணம் வழங்குவதற்கும் அவர் முன்னுரிமை கொடுத்திருப்பார். அதேநேரத்தில், அவர் பெரிய அளவிலான திட்டங்களைத் தொடங்கியிருப்பார், வெளிநாட்டு உதவி மற்றும் முதலீட்டை ஈர்க்க சிறப்புக் குழுக்களை உருவாக்கி பொருளாதாரத்திற்குப் புத்துயிர் அளித்திருப்பார்.

பிரேமதாச உயர் கல்வியறிவு பெறாத ஒருவராக இருந்தபோதும், சர்வதேச உறவுகளில் நிபுணராக இல்லாவிட்டாலும், அவரது அச்சமின்மையும், அனுசரித்துச் செல்லும் தன்மையும் அவரை வேறுபடுத்திக் காட்டியது. இன்றைய தலைவர்கள், தமது வாக்குறுதிகளை நிறைவேற்ற போராடும் அநுர போன்றவர்கள், பிரேமதாசவின் தலைமைத்துவத்திலிருந்தும், அவரது தொலைநோக்குப்பார்வைக்கான அசைக்க முடியாத அர்ப்பணிப்பிலிருந்தும் பெறுமதியான பாடங்களைக் கற்றுக்கொள்ளமுடியும்.



# நாடகப் பேராளுமையின் இறுதிக் கிரியை நாளை







ஈழத்து தமிழ் நவீன நாடக உலகின் தாய் என்று வர்ணிக்கப்படுகின்ற கலாநிதி ம.சண்முகலிங்கம் ( குழந்தை ) அவர்கள் 17.01.2025 அன்று தனது 93வது வயதில் காலமானார். அவரது இறுதிக் கிரியைகள் நாளை திங்கட்கிழமை இடம்பெறவுள்ளது.

நுற்றுக்கு மேற்பட்ட சுயஆக்க நாடகங்களையும் அறுபதிற்கு மேற்பட்ட மொழிபெர்ப்பு நாடகங்களையும் தமிழ் நாடக உலகிற்கு தந்த பேராளுமை குழந்தை ம. சண்முகலிங்கம். இவரது ஆற்றலும்ஆளுமையுமேநாடகமும்அரங்கியலும்என்ற பாடத்துறை தமிழில் வளர்ச்சியடையக்காரணமாக அமைந்தது.

இவரது நாடகப்பணியைப் போற்றி கிழக்குப்பல்கலைக்கழகம் இவருக்கு கொளரவ கலாநிதி பட்டடம் வழங்கி கொளரவித்துள்ளது.

அவரது பூதவுடல் மக்கள் அஞ்சலிக்காக திருநெல்வேலியில் உள்ள அவரது இல்லத்தில் வைக்கப்படுள்ளது.

அவரது மறைவையெட்டி அஞ்சலி செலுத்தியிருக்கும் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன், நாடகத்துறை பிதாமகரின் இழப்பு ஈழத்திற்கே ஏற்பட்ட பேரிழப்பு என்று தெரிவித்திருக்கிறார். அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:

ஈழத்து நாடகத்துறையின் பிதாமகரும், நாடக அரங்கக் கல்லூரியின் நிறுவுனரும், நாடகப் பேராளுமையானகலாநிதிகுழந்தைம.சண்முகலிங்கன் ஐயாவின் மறைவு, இந்த மண்ணின் நாடகத் துறையின் பேரிழப்பாகப் பதிவாகியிருக்கிறது.

முத்தமிழ்க் கலைகளுள் முதன்மையானதாகப் பார்க்கப்படும் நாடகக் கலையை, ஈழத்துப் பாரம்பரியத்தோடும், கூத்துக் கலை மரபோடும் கட்டிறுக்கமாகப் பிணைத்து அரங்க நாடகத் துறையில் புதுமையும், பேரெழுச்சியும் மிக்க ஈழத்து நாடகப் பாரம்பரியத்தை உருவாக்கிய இவரை, ஈழ நாடகத் துறையின் 'பிதாமகர்' எனப் போற்றுதல் சாலப் பொருந்தும்.

ஒரு நடிகராக, நாடக எழுத்தாளராக, நெறியாளராக,பன்மொழிப்புலமையாளராக என பலநிலைப்பட்ட ஆளுமைப் பேரொளியாக தனக்கான தனிமனித அடையாளத்தை உருவாக்கிக் கொண்ட குழந்தை ம.சண்முகலிங்கன் அவர்கள், நாடக அரங்கக் கல்லூரியை உருவாக்கி, ஈழத்தின் நாடகப் பாரம்பரியத்தை முறைமைப்படுத்தப்பட்டகல்விப்போதனை ஊடாக அடுத்த தலைமுறைக்கு கையளிக்க முனைந்ததன் விளைவாக, ஈழத்து நாடகப் பாரம்பரியத்துக்கும் அதனையே தமது துறையாக வரித்துக் கொண்ட நாடக ஆளுமைகள் பலருக்கும் அடையாளம் தந்த கனதிமிக்க கலைப்பணியை செவ்வனே ஆற்றியிருக்கிறார். ஒரு ஆசிரியராகவும், விரிவுரையாளராகவும், நாடக நெறியாளராகவும் அவரிடத்தே இருந்த கலைப் போதனைப் பண்பு ஈழ நாடகத் துறையின் அடுத்தடுத்த வளர் நிலைக்கு வழிகோலியது என்பதை மறுப்பதற்கில்லை.

அன்னையிட்ட தீ, மண் சுமந்த மேனியர், வேள்வித் தீ, எந்தையும் தாயும், ஆர்கொலோ சதுரர் உள்ளிட்ட அழியாப் புகழ் மிக்க நாடகங்களின் வழியும், தன் உதிரத்தில் உறைந்த நாடகக் கலையை ஊட்டி அவர் உருவாக்கிய அடுத்த சந்ததியின் நாடக ஆளுமைகளின் முகமாகவும் கலாநிதி குழந்தை.ம.சண்முகலிங்கன் தன் மறைவின் பின்னும் இந்த உலகில் ஒளிர்வார்.

**அன்னாருக்கு எம் புகழ் அஞ்சலிகள்.**

காலைக்கதிர் Kalaikkathir

# முக்கிய திருப்புமுனையின் ஆரம்பப் புள்ளியே ஜன. 25

## கஜேந்திரகுமார் நம்பிக்கை



தமிழ்த்தேசியஅரசியலில்முக்கியதிருப்புமுனையின் ஆரம்பப் புள்ளியாக, எதிர்வரும் 25ஆம் திகதி நடைபெறவுள்ள சந்திப்பு அமையும் என தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

சமகால அரசியல் நிலவரங்கள் தொடர்பாக யாழ்ப்பாணத்தில் உள்ள கட்சியின் தலைமை அலுவலகத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பின் போது, அவர் இதனைத் தெரிவித்தார்.

கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மேலும் தெரிவித்ததாவது:

சில கட்சிகள், தங்களது தேவைக்காக அல்லது புறக்கணிக்கப்பட்டதாக உணர்ந்து, தனித்து செயற்பட முயல்கின்றன.

ஆனால், கடந்த நாடாளுமன்ற அமர்வின் போது, நாடாளுமன்ற குழுத் தலைவர்கள் மத்தியில் கலந்துரையாடல் நடந்தது. அது, அனைத்து கட்சிகளையும் ஒருங்கிணைக்கவேண்டிய நோக்கில் அமைந்தது.

இதனைத் தொடர்ந்து, எதிர்வரும் 25ஆம் திகதி நடைபெறவுள்ள சந்திப்பில், நாடாளுமன்ற குழுத் தலைவர்களைத் தாண்டி, கட்சியின் பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்துவதோடு, இனப்பிரச்சினை தொடர்பாக அறிவியல் மற்றும் அதிகார ரீதியான பேச்சுகளை மேற்கொள்ளும் நபர்களையும் இணைக்க வேண்டும் என்பதே எங்கள் நோக்கம்.

இந்த சந்திப்பு ஆக்கபூர்வமாக அமைய வேண்டும். கட்சி ரீதியாக பேசப்பட்டு, ஒருமித்த முடிவுக்கு வரவேண்டியது அவசியம்.

நாம் கலந்துரையாடிய பிறகு, கட்சியின் அனுமதியைப்பெறவேண்டும்என்பதேமுறையாகும். எந்த ஒரு குழுவும் கட்சியின் அனுமதியின்றி செயற்படக்கூடாது.

எதிர்வரும் 25ஆம் திகதி நடைபெறும் சந்திப்பு, தமிழ்த் தேசிய அரசியலில் ஒரு திருப்புமுனையாக அமையும். அரசாங்கம் தனது வசதிக்கேற்ப தமிழ்த் தேசிய அரசியலை நசுக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ள நிலையில், தமிழ்த் தேசிய நிலைப்பாட்டை வலியுறுத்தும் தரப்புக்கள் ஒன்று கூட வேண்டும்.

தமிழர்களின்பாரம்பரியஅரசியல்நிலைப்பாட்டை மக்கள் மதிக்க வேண்டும். தமிழ் தேசிய அரசியல், உரிய கௌரவத்துடன், எதிர்காலம் நோக்கி முன்னேற, அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும். இதனை உணர்ந்து செயற்படுவதற்காகவே, இந்த முயற்சியில் ஈடுபட்டுள்ளோம். - என்றார்.

# விடுகை விழா

(அபு அலா, முபீன்)

திருகோணமலை - கோபாலபுரம் பாலர் பாடசாலையின் 38 ஆவது ஆண்டு விடுகை விழாவும், பரிசளிப்பும் கோபாலபுரம் தமிழ் வித்தியாலய மண்டபத்தில் வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

பாலர் பாடசாலையின் தலைமை ஆசிரியை பவள ராசா சாந்தி தலைமையில் இடம்பெற்ற இவ்விழாவுக்கு குச்சவெளி பிரதேச சபை செயலாளர் வெளிண்டன் இந்திரஜி பிரதம அதிதியாகவும், கோபாலபுரம் வருமான பரிசோதகர் கதிரவேல் லிங்கேஸ்வரர் கௌரவ அதிதியாகவும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இதன்போது பாடசாலை சிறார்களால் கலை கலாசார நிகழ்வுகள் இடம்பெற்று. இதில் பங்குபற்றி சிறார்களுக்கும், விடுகை பெற்றுச் செல்லும் சிறார்களுக்கும் பரிசில் மற்றும் சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.







# நானுஓயாலில் லொறி விபத்து இரண்டு மாடுகள் படுகாயம்

## மேலும் இரண்டு மாடுகள் மாயம்

(கிஷாந்தன்)



நுவரெலியா ஹற்றன் பிரதான வீதியில் நானுஓயா ரதல்ல குறுக்கு வீதியில் நேற்று (சனிக்கிழமை) அதிகாலை மாடுகளை ஏற்றிச் சென்ற லொறியில் திடீரென ஏற்பட்ட இயந்திரக் கோளாறு காரணமாக வாகனத்தை கட்டுப்படுத்த முடியாததன் காரணமாக கட்டுப்பாட்டை இழந்து மண்மேட்டில் மோதிவிபத்துக்குள்ளானதில் லொறியின் உதவியாளர் பலத்த காயமடைந்த நிலையில் நுவரெலியா மாவட்ட பொது வைத்திய சாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளார்.

வெளிமடை பகுதியில் இருந்து நுவரெலியா வழியாக ஹற்றன் பகுதியில் உள்ள பண்ணை ஒன்றுக்கு குறித்த மாடுகளை ஏற்றிச்சென்ற போதே விபத்து நேர்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

விபத்துக்குள்ளான போது லொறியினுள் 9 மாடுகள் இருந்துள்ளன எனவும் அவற்றில் 2 மாடுகளுக்கு பலத்த காயங்கள் ஏற்பட்டுள்ளமையால் அருகில் உள்ள மிருக வைத்திய சாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளன எனவும் இரண்டு மாடுகள்மாயமாகியுள்ளனஎனவும்அவற்றை தேடும்நடவடிக்கைகள்மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

நானுஓயா ரதல்ல குறுக்கு வீதியில் ஐந்து தொன்களுக்கும் குறைவான வாகனங்கள் மாத்திரம் சென்று வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது வீதி அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் பொலிஸாரும் இணைந்து இந்த வீதியின் போக்குவரத்து தொடர்பில் சாரதிகளுக்கு விழிப்புணர்வூட்டும் ஏராளமானபதாதைகள்வீதியில்இருபுறமும் காட்சிப்படுத்தப்பட்டுள்ள போதிலும் சட்டங்களை மீறும் சாரதிகள் இந்த வீதியில் ஐந்து தொன்களுக்கும் அதிக எடையுள்ள வாகனங்களைச் செலுத்துவதன் காரணமாகவே அதிக விபத்துக்கள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றன.

விபத்து தொடர்பிலான மேலதிக விசாரணைகளை நானுஓயா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

எனவே வீதி அபிவிருத்தி அதிகார சபை, பொலிஸார் மற்றும் பொறுப்பான அதிகாரிகள் இணைந்து நானுஓயா ரதல்ல குறுக்கு வீதியில் கனரக வாகனங்கள் இங்கு செல்லாமல் தடுப்புகளை பலப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என பிரதேசவாசிகள் தெரிவித்துள்ளனர்.



காலைக்கதிர் Kalaikkathir

# 12 வாகன பற்றரிகளுடன் ஒருவர் வவுனியா நெளுக்குளத்தில் கைது

வவுனியா, நெளுக்குளம் பகுதியில் 12 வாகன பற்றரிகளை மகேந்திரா ரக வாகனத்தில் ஏற்றிச் சென்ற ஒருவரை கைது செய்துள்ளதுடன்,வாகனத்தையும் கைப்பற்றியுள்ளதாக நெளுக் குளம் பொலிஸார் நேற்று தெரிவித்தனர்.

நெளுக்குளம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சி.எம்.பி.ஆர்.கே.திவுல்வெள தலைமையிலான பொலிஸ் குழுவினர்நெளுக்குளம்பகுதியில் திடீர்சோதனைநடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தனர்.

இதன் போதே குறித்த மகேந்திரா ரக வாகனத்தை சோதனைக்குட்படுத்திய போது வாகனத்தில் 12 வாகன பற்றரிகளைமீட்டெடுத்துள்ளனர். இதனையடுத்து குறித்த வாகன பற்றிகளை ஏற்றிச்சென்ற வாகனத்தின் சாரதியை கைது செய்ததுடன்,அவ்வாகனத் தினையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

வாகன உரிமையாளர்கள் பற்றிரிகள் எவையும் களவாடப் பட்டுள்ளமைதொடர்பில்உடனடி யாக நெளுக்குளம் பொலிஸ் நிலையத்திலோ அல்லது அருகில் உள்ள பொலிஸ் நிலையத்திலோ முறைப்பாட்டினைவழங்குமாறு பொலிஸார் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த நான்கு வாரத்திற்கு முன்னர்வவுனியா, நெளுக்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வேப்பங்குளம் பகுதியில் அமைந்துள்ள வாகன தரிப்பிடம் ஒன்றில் வாகன பற்றரிகளை களவாடியகுற்றச்சாட்டில்நான்கு வாகனபற்றரிகளுடன்இருவரை நெளுக்குளம்பொலிஸார்கைது செய்தமையும்குறிப்பிடத்தக்கது. 100





# 'ஐஸ்' போதையுடன் மருதமுனையில் அதிரடிப்படையினரால் ஒருவர் கைது

(தில்சாத் பர்வீஸ்)

அம்பாறைமாவட்டம்பெரியநீலாவணை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மருதமுனை பிரதேச வைத்தியசாலை வீதியில் ஐஸ் போதைப் பொருளுடன் வெள்ளிக்கிழமை இரவு 10.00 மணியளவில் கல்முனை விசேட அதிரடிப் படையினர் ஒருவரை கைது செய்துள்ளனர்.

கல்முனை விசேட அதிரடிப்படை அதிகாரிகளுக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கைகளின் போது, ஐஸ் போதைப் பொருளுடன் சந்தேக நபர் ஒருவரை கல்முனை விசேட அதிரடிப் படையினர் கைது செய்துள்ளனர்.

பெரியநீலாவணை 02, மருதமுனை பகுதியைச் சேர்ந்த 36 வயதுடைய சந்தேக நபர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

இதன்போது, கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடம் இருந்து ஒரு கிராம் 20 மில்லி கிராம் ஐஸ் போதைப் பொருள் மீட்கப்பட்டிருந்ததுடன், சந்தேக நபர்கள் உள்ளிட்ட சான்றுப்பொருள்கள் என்பன சட்டநடவடிக்கைக்காக பெரியநீலாவணை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

மேலும், இந்த கைது நடவடிக்கை கல்முனை விசேட அதிரடிப்படை முகாம் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் ஆர்.ஏ.டி.சி.எஸ்.ரத்நாயக்கவின் பணிப்புரைக்கமைய முன்னெடுக்கப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பெரியநீலாவணை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.





## ஆலயங்கள் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சர் சுந்திரலிங்கம் பிரதீப் ஆகியோர் நல்லை ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ ஞானசம்பந்த பரமாச்சாரிய தேசிகரைச் சந்தித்து ஆசீர்வாதம் பெற்றுக்கொண்டனர். இந்தச் சந்திப்பில் ரிஷி தொண்டுநாதன், செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறுதிருமுருகன் உள்ளிட்டவர்களும் பங்கேற்றிருந்தனர்.

இச்சமயத்தில், செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறுதிருமுருகன், வடக்கு மாகாணத்தில் அதிகரித்துவரும் போதைப்பொருள் வியாபாரம், மற்றும் பாவனைகளை கட்டுப்படுத்துமாறு அமைச்சர்களிடம் கோரிக்கை விடுத்தார். பாடசாலைகள் மற்றும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஆலயங்களுக்குஅண்மித்துள்ளமதுவிற்பனை நிலையங்களை அகற்றுவதற்கான நடவடிக்கைகளையும் தாமதமின்றி முன்னெடுக்குமாறும் வலியுறுத்தினார்.

கீரிமலை,பலாலிவீதியை34ஆண்டுகளாகப் படையினர்மூடிவைத்திருக்கின்றனர்,அதனை திறந்துவிடாதிருப்பதற்கு எந்த நியாமில்லை என்றும் சுட்டிக்காட்டியவர், உயர்பாதுகாப்பு வலயங்கள் மற்றும் விடுவிக்கப்படாத பகுதிகளில் உள்ள ஆலயங்களைப் பாதுகாக்க வேண்டியஅவசியத்தையும்வலியுறுத்தினார். அப்பகுதிகளைப் படையினரின் பிடியிலிருந்து விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் கோரினார்.

ஆலயங்கள் மற்றும் அவற்றுக்கான நிலங்கள் படையினரால் இன்னமும் விடுவிக்கப்படாதுள்ளமை குறித்த விபரங்கள் ஜனாதிபதி அநுரகுமார திசாநயக்கவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்றும் ஆறுதிருமுருகன் குறிப்பிட்டார்.

பதிலளித்த அமைச்சர் பேராசிரியர் ஹினிதும சுனில் செனவி, யாழ்ப்பாண மக்கள் எம் மீது நம்பிக்கை வைத்து வழங்கிய ஆணையை நாங்கள் மதிக்கின்றோம். அதன் காரணமாகவே நாம் தேசிய பொங்கல் விழாவை யாழ்ப்பாணத்தில் முன்னெடுக்கின்றோம். தற்போது நாட்டில் இன ஐக்கியத்தைகட்டியெழுப்புவதற்கானசந்தர்ப்பம் கிடைத்துள்ளது. சமூகஒழுங்கவிழுமியங்களை மேம்படுத்துவதற்கான வாய்ப்புக்கள் ஏற்பட்டுள்ளன. கொழும்பில் வெவ்வேறு காரணங்களுக்காக மூடிவைக்கப்பட்டிருந்த வீதிகள் இப்போது திறக்கப்பட்டு வருகின்றன. அந்த வகையில் வடக்கிலும் ஏலவே நாம் முக்கிய வீதியொன்றை திறந்துள்ளோம். ஏனைய வீதிகளும் போக்குவரத்துக்காகத் திறந்து வைக்கப்படும் என்றார்.

ஆலயங்கள் பற்றிய விவரங்களை நீங்கள் ஜனாதிபதியிடத்தில் அனுப்பியுள்ள நிலையில் அதுபற்றிய விபரங்களை நான் அவரிடத்தில் பெற்றுக்கொண்டு அடுத்த கட்ட நடவடிக்கைகளைவிரைந்துமுன்னெடுப்பேன்.

பாடசாலைகள் மற்றும் வணக்க தலங்களுக்கு அருகாமையில் அமைக்கப்பட்டுள்ள மதுவிற்பனை நிலையங்கள்சம்பந்தமாககல்விஅமைச்சுடன் இணைந்ததான செயற்றிட்டமொன்று முன்னெடுக்கப்படுகின்றது.

அந்த வகையில் வடக்கு மாகாணம் சம்பந்தமாகவும்நாம்கவனம்செலுத்துவோம் என்றும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, இந்தச் சந்திப்பில் பங்கேற்றிருந்த பிரதியமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப், யாழ்ப்பாண மக்கள் தேசிய மக்கள் சக்திக்கு வழங்கிய ஆணை மிகவும் முக்கியமானது. இந்தத் தருணத்தில் நாம் நல்லிணக்கச்செயற்பாடுகளை முன்னெடுத்து அனைவரும் இலங்கையர்கள் என்ற அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்கு முயற்சிக்கின்றோம். அந்த வகையில் வடக்கில் கடந்த காலத்தில் இருந்த ஆட்சியாளர்கள் அரசியல் நோக்கங்களுக்காக அதிகளவில் மதுபானசாலைகளுக்கான அனுமதிப்பத்திரங்களை வழங்கியுள்ளார்கள். அதுதொடர்பில்நாம்ஆராய்ந்துவருகின்றோம். யாழ்ப்பணம் கல்வியில் முன்னிலையில் திகழ்ந்ததொரு மாவட்டமாகும். அதனை மீளவும்ஏற்படுத்துவதற்கானநாம்அனைவரும் ஒன்றிணைந்துசெயற்படுவதற்குதயாராகவே உள்ளோம் - என்றார்.

## நாடாளுமன்ற.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இரண்டாவதுமுறைஎன்றுதெரிவிக்கப்படுகிறது.

நாடாளுமன்ற இணையதளத்தில் நாடாளுமன்றஉறுப்பினர்களின்பெயர்களைச் சேர்ப்பதற்குப்பொறுப்பானஅவைச்செயலகம், சட்டவாக்கசேவைகள்பணிப்பாளர்நாயகத்தின் கீழ் உள்ளது.

இந்த சூழ்நிலையில் ஜயலத் பெரேரா குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கு அழைக்கப்பட்டிருந்தார். இருப்பினும், முன்னதாக, சுமார் 8 நாடாளுமன்ற அதிகாரிகள் அந்தத் திணைக்களத்திற்கு வரவழைக்கப்பட்டனர்.

நாடாளுமன்ற இணையதளத்தில் தனது பெயருக்கு முன்னால் கலாநிதி பட்டம் குறிப்பிடப்பட்டதால்தான்அவமதிக்கப்பட்டதாகக் கூறி, நீதி அமைச்சர் சமீபத்தில் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முறைப்பாடு அளித்திருந்தார்.

## தேசியப் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சமர்ப்பிக்காத 74 பேருக்கு எதிராக வழக்குத் தொடர தேர்தல்கள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

இந்த 74 பேரின் விவரங்களையும் பொலிஸாரிடம் கையளித்து சட்ட நடவடிக்கைகளை எடுப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மேலதிக தேர்தல் ஆணையாளர் (சட்டம்) சட்டத்தரணி சிந்தக குலரத்ன தெரிவித்தார்.

இதற்கு மேலதிகமாக, பொதுத் தேர்தல் செலவு அறிக்கையை சமர்ப்பிக்காத 134 அரசியல் கட்சிகளுக்கு எதிராகவும்தேர்தல்கள் ஆணைக்குழு வழக்குத் தொடரவுள்ளதாக குலரத்ன தெரிவித்தார்.

2024 பொதுத் தேர்தல் செலவு அறிக்கையைச்சமர்ப்பிக்காதவேட்பாளர்களின் எண்ணிக்கை எண்ணூறுக்கும் மேல். அவர்கள் அனைவர் மீதும் தனித்தனியாக வழக்கு தொடரப்படும் என தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

செலவு அறிக்கை தராத வேட்பாளர்கள் தொடர்பில்அந்தந்தபொலிஸ்நிலையங்களினால் விசாரணை நடத்தப்பட்டு, விசாரணைக் கோப்புகள் சட்ட நடவடிக்கைகளுக்காக சட்டமா அதிபருக்கு அனுப்பி வைக்கப்படும் என சிந்தக குலரத்ன மேலும் தெரிவித்தார்.

தேர்தல்செலவுஅறிக்கையைசமர்ப்பிக்கத் தவறும் வேட்பாளர்கள் மற்றும் அரசியல் கட்சிகளுக்கு அபராதம், சிறைத்தண்டனை அல்லது மேலும் எதிர்காலத் தேர்தல்களில் போட்டியிடாமல் தடுப்பது போன்ற தண்டனைகளைவிதிக்கசட்டத்தில்இடமுண்டு.

## மின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பரிந்துரைப்படி பொது நுகர்வோர், ஹோட்டல் துறை மற்றும் கைத்தொழில்கள் உட்பட அனைத்துத் துறையினருக்கும் நிவாரணம் வழங்கும் வகையில் மின்சாரக் கட்டணங்கள் குறைக்கப்படும் என்று அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## உப்பு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விநியோகிக்கவுள்ளதாக அரச வணிகக் கூட்டுத்தாபனத்தின் பொது முகாமையாளர் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்வரும் 31ஆம் திகதிக்கு முன்னர் 30,000 மெட்ரிக் தொன் உப்பை இறக்குமதி செய்வதற்காகஅண்மையில்விலைமனுக்கள் கோரப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## உள்ளூராட்சித்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலட்சம் இளைஞர், யுவதிகளும் தமது வாக்குகளைப் பயன்படுத்த முடியும். அதேபோன்றுஉள்ளூராட்சிமன்றத்தேர்தலில் 25 சதவீத இளைஞர் பிரதிநிதித்துவத்தையும் பெற்றுக்கொள்ள முடியும். இதுகுறித்த சட்ட மூலம் ஜனவரி 9 நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதனை எதிர்த்து நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்ய ஜனவரி 23 வரை கால அவகாசம் உள்ளது.

குறிப்பிட்டகாலஎல்லைக்குள்ஆட்சேபனை தெரிவிக்கப்படாவிட்டால் இந்தச் சட்ட மூலம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படும். அவ்வாறு நிறைவேற்றப்பட்டால் மீண்டும் வேட்புமனு கோரலுக்கு 17 நாட்களும், பரப்புரைகளுக்காக ஆகக் குறைந்தது 5 வாரங்கள் அல்லது ஆகக் கூடியது 7 வாரங்களும் வழங்கப்படும். நீதிமன்றத்தில் ஆட்சேபனை தெரிவிக்கப்படாதபட்சத்தில் ஏப்ரல்முதல்வாரத்தில்தேர்தலைநடத்துவதில் எவ்வித தடையும் ஏற்படாது.

நாடாளுமன்றத்தில் ஆளும்தரப்புக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை காணப்படும் அதேவேளை, சகல அரசியல் கட்சிகளும் இவ்விவகாரத்தில் பொது இணக்கப்பாட்டையும்தெரிவித்துள்ளன.எனவே ஏப்ரல் முதல் வாரத்தில் உள்ளூராட்சிமன்றத் தேர்தல் இடம்பெறும் என்று நம்புகின்றோம். குறித்த சட்ட மூலம் நிறைவேற்றப்பட்ட நாள் முதல் 3 மாதங்களுக்குள் வேட்புமனு கோரப்படவேண்டும் எனச் சட்டத்திலேயே தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனவே நீதிமன்றத்தில் ஆட்சேபனை முன்வைக்கப்பட்டாலன்றி,உள்ளூராட்சிமன்றத் தேர்தலை காலம் தாழ்த்துவதற்கு வேறு எந்த வாய்ப்பும் இல்லை. மாறாக வேறு ஏதேனுமொரு காரணத்தைக் காட்டி இத்தேர்தலை காலம் தாழ்த்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டால் பவ்ரல் அமைப்பு மீண்டும் நீதிமன்றம் செல்லும்.

மேலும் மாகாணசபைத் தேர்தல் சுமார் 6 வருடங்களுக்கும் அதிகமாக காலம் தாழ்த்தப்பட்டுள்ளது. இதனையும் உரிய காலத்தில்நடத்துவதற்கானநடவடிக்கைகளை ஆளும்தரப்பு முன்னெடுக்க வேண்டும் என்றார்.

# யாழ். பண்பாட்டு மையத்தின் பெயர் மாற்றியமைக்கப்பட்டது

## திருவள்ளுவர் கலாசார மையம் என்றானது

இந்திய அரசின் நிதியுதவியுடன் அமைக்கப்பட்ட யாழ்ப்பாணம் பண்பாட்டுமையத்திற்கு'திருவள்ளுவர் கலாசார மையம்' என நேற்று (சனிக்கிழமை) பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

திருவள்ளுவரைக் கௌரவிக்கும் வகையில் குறித்த பெயர் மாற்றம் செய்யப்பட்டதாக இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகராலயம் தெரிவித்தது.

இந்நிகழ்வில் இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா, புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் சுனில் செனவி, கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், வட மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன், யாழ்ப்பாணத்திற்கான இந்திய துணைத் தூதர் சாய் முரளி, யாழ் மாநகர ஆணையாளர் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.








# வவு. பாவற்குளம் பிரதேச வைத்தியசாலையில் நோயாளரை அலைக்கழிப்பதாக குற்றச்சாட்டு




வவுனியா - பாவற்குளம் பிரதேச வைத்தியசாலையில் சிகிச்சைக்கு செல்லும் நோயாளர்களை அலைக்கழிப்பதாக பொது மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

வவுனியா- பாவற்குளம் பிரதேச வைத்தியசாலையானது பல கிராமங்களைச் சேர்ந்த மக்கள் சிகிச்சைக்காக செல்லும் வைத்தியசாலையாகும். குறிப்பாக பாவற்குளம் படிவம் இரண்டு, உளுக்குளம், சூடுவெந்தபுலவு, இராசேந்திரங்குளம், பாரதிபுரம், அவுரந்துலாவ உள்ளிட்ட பல பகுதிகளில் இருந்து மக்கள் சிகிச்சைக்காக சென்று வருகின்றனர்.

ஆனால், குறித்த வைத்தியசாலையில் வைத்தியர், தாதியர்கள், மருந்தாளர் ஆகியோர் வைத்தியசாலையில் இருந்தும் மதியம் 12 மணி தொடக்கம் 2 மணி வரை தமது சாப்பாட்டு நேரம் எனக் கூறி அந்த நேரங்களில் வைத்தியசாலைக்கு செல்லும் நோயாளர்களை 2 மணிக்கு பிறகு வருமாறு திருப்பி அனுப்பபடுகின்றனர்.

இதனால் பல்வேறு கஸ்ரங்களுக்கு மத்தியில் கிராமங்களில் இருந்து வைத்தியசாலைக்கு சென்றவர்கள் ஏமாற்றத்துடன் மீண்டும் வீடு செல்ல வேண்டிய நிலை ஏற்படுகிறது.

அல்லது அங்கிருந்து வவுனியா மாவட்ட வைத்தியசாலைக்கு பணம் செலவு செய்து போக்குவரத்து கஸ்ரங்களுடன் செல்ல வேண்டி இருப்பதாக பொது மக்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே, இது தொடர்பில் மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவர் மற்றும் உரிய அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டும் என பொதுமக்கள் கோரியுள்ளனர். 100

# மட்டக்களப்பு வாவியில் பெண்ணின் சடலம் மீட்பு

மட்டக்களப்பு நகர் வாவியில் நீரில் மூழ்கி உயிரிழந்த நிலையில் அடையாளம் காணப்படாத பெண்ணொருவரின் சடலம் நேற்று (சனிக்கிழமை) காலை 10 மணியளவில் மீட்கப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

கல்லடி பாலத்துக்கு அருகிலுள்ள முனிச் விக்டோரியா நட்புறவு வீதியிலுள்ள வாவிக்கரையில் நீரில் மூழ்கிய நிலையில் சடலம் கரையை அடைந்ததை கண்ட பொதுமக்கள் பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளனர்.

இதனையடுத்து, சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் சடலத்தை மீட்டு, பிரேத பரிசோதனைக்காக வைத்தியசாலைக்கு கொண்டுசெல்ல நீதிமன்றத்தின் அனுமதியை பெறும் நடவடிக்கையை முன்னெடுத்து வருகின்றனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மட்டக்களப்பு தலைமையக பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# ஹோட்டலுக்கு உணவருந்தச் சென்ற மாணவர் மீது இடிந்து விழுந்தன கட்டுமானப் பலகைகள்

## 6 பேர் பலத்த காயங்களுடன் வைத்தியசாலையில்

(கிஷாந்தன்)



கினிகத்தேன நகரிலுள்ள உணவகமொன்றில் பாதுகாப்பற்ற முறையில் அமைக்கப்பட்டிருந்த அறையொன்று நேற்று (சனிக்கிழமை) உடைந்து விழுந்ததில் ஆறு மாணவர்கள் காயமடைந்துள்ளனர்.

தரம் 10 இல் கல்வி பயிலும் ஆறு மாணவர்கள், கினிகத்தேன நகருக்கு பிரத்தியேக வகுப்புக்கு வந்திருந்த நிலையில், குறித்த ஹோட்டலுக்கு சென்று உணவருந்தியுள்ளனர்.

ஹோட்டலில் இருந்த அறையொன்றின் அடிதளத்தில் பலகைகள் உடைந்ததையடுத்து மாணவர்கள் கீழே விழுந்துள்ளனர். சுமார் 15 அடிவரை பள்ளத்துக்கு மாணவர்கள் இழுத்துச்செல்லப்பட்டுள்ளனர்.

இதனால் காயமடைந்த மாணவர்கள் பிரதேச வாசிகளால் கினிகத்தேன வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டுள்ளனர்.

குறித்த உணவகம் பாதுகாப்பற்ற முறையிலும், சுகாதார பாதுகாப்பு இன்றியும் இயங்கிவந்துள்ளது என மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

இச்சம்பவம் தொடர்பில் கினிகத்தேன பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.



# ஹற்றனில் பொங்கல் விழா



ஹற்றன் இந்து இளைஞர் நற்பணி மன்றத்தினர் ஏற்பாடு செய்த பொங்கல் விழா நிகழ்வு நேற்று (சனிக்கிழமை) ஹற்றன் நகரில் இடம்பெற்றது.

இதன் போது மதத்தலைவர்கள் ஆசியுரை வழங்கியதையும் கலந்து கொண்ட உறுப்பினர்களையும் நகர மக்களுக்கு பொங்கல் விநியோகிக்கப்படுவதையும் படங்களில் காணலாம்.



# சிறையில் உள்ள போதைக் கடத்தல்காரரின் ரூ. 280 மில்லியனை கைப்பற்றியது பொலிஸ்

வரலாற்றில் ஒரு போதைப்பொருள் கடத்தல்காரரிடமிருந்து கைப்பற்றப்பட்ட மிகப்பெரிய தொகையான 280 மில்லியன் ரூபாவை மீட்டெடுப்பதில் பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பணியகம் வெற்றி பெற்றுள்ளது.

குருநாகல் பகுதியில் உள்ள ஒரு வீட்டில் இருந்தே குறித்த பணம் கண்டுபிடிக்கப்பட்டது.

சோதனையின் போது 18 கிராம் ஐஸ் போதைப்பொருள், ஒரு டாக்ஸி மற்றும் ஒரு வான் ஆகியவையும் பறிமுதல் செய்யப்பட்டன எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

போதைப்பொருள் கடத்தல்காரர் சிறையில் இருப்பதாகவும், அங்கிருந்து போதைப்பொருள் வர்த்தகத்தை நடத்தி வருவதாகவும் பொலிஸார் மேலும் தெரிவிக்கின்றனர்.

இந்த சம்பவம் தொடர்பாக தற்போது சிறையில் உள்ள போதைப்பொருள் கடத்தல்காரர் குருநாகல் நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார், மேலும் அவரை தடுத்து வைத்து விசாரிக்க நீதவான் அனுமதி வழங்கியுள்ளார்.

# மட்டு அரச அதிபருக்கு எதிராக விவசாயிகள் மனித உரிமை ஆணைக்குழுவில் முறையீடு

மட்டக்களப்பு மாவட்டத்தில் வேளாண்மை அறுவடை செய்வதற்கான திகதி தீர்மானிக்கப்பட்ட நிலையில் குறித்த திகதிக்கு முன்னர் முதலாளித்துவ வர்க்கத்தைச் சேர்ந்த ஒரு சிலருக்கு அறுவடை செய்ய அரசாங்க அதிபர் அனுமதி வழங்கியதால் ஏழை விவசாயிகள் பாதிக்கப்படுகின்றனர். எனவே இந்த அரசாங்க அதிபரின் செயற்பாட்டை கண்டித்து விவசாயிகள் ,அவருக்கு எதிராக இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவில் வெள்ளிக்கிழமை முறைப்பாடு செய்துள்ளனர்.

மட்டக்களப்பு கோவிந்தன் வீதியிலுள்ள இலங்கை மனித உரிமை ஆணைக்குழு காரியாலத்திற்கு சில விவசாயிகள் சென்று அரசாங்க அதிபருக்கு எதிராக முறைப்பாடு செய்துள்ளனர்.

இது தொடர்பாக விவசாயிகள் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் -

2024, 2025 பெரும்போக செய்கைக்கான முன்னோடிக்கூட்டம் கச்சேரியில் ஆரம்பமாகி ஆரம்ப கூட்டம் ஒவ்வொரு பிரதேசத்தில் இடம்பெற்று அதற்கான வேலைத்திட்டம் தற்போது அறுவடைக்கு சில காலம் இருக்கும் நிலையில் ஒரு சில விவசாயிகளின் நலன்கருதி அரசாங்கஅதிபர் அவர்கள் முன்கூட்டி அறுவடை செய்வதற்கான அனுமதி வழங்கியுள்ளார்.

இவ்வாறான செயற்பாட்டை ஏற்றுக் கொள்ள முடியாத முதலாளித்துவ வர்க்கத்தினர் நூற்றுக்கு மேற்பட்ட ஏக்கர் வேளாண்மையை செய்கின்றவர்கள். அதுமட்டுமல்லாது கூடுதலான வெட்டு இயந்திரங்களை கொண்டு அறுவடை செய்கின்ற இவர்களே இவ்வாறான அத்துமீறல் செயற்பாட்டை செய்கின்றனர்.

இவர்கள் விவசாய அமைப்புக்களை சார்ந்து பிரதேசத்தின் கமநல அமைப்புக்களின் தலைவர்களாக திட்ட முகாமைத்துவ உப தலைவர்களாக இருந்து கொண்டு இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுவது மிலேச்சத்தனமானது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் 2 லட்சம் ஏக்கருக்கு மேலாக வேளாண்மை செய்துவரும் நிலையில் குறிப்பிட்ட ஒரு சிலருக்கு அறுவடை செய்ய கொடுப்பதன் மூலமாக ஏழை விவசாயிகள் பாதிக்கப்படுகின்றனர் .

களத்தில் நின்று விவசாயிகளின் கஷ்ட நஷ்டத்தை பாராத இவர்கள், குளிர் ஊட்டப்பட்ட அறையில் மேசையில் இருந்து எழுதிக் கொண்டு அனுமதி வழங்குவதை ஒரு காலமும் எங்களால் ஏற்றுக் கொள்ள முடியாது. ஆகவே இதனால்விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ள அநீதிக்கு மனித உரிமை ஆணைக் குழுவில் முறைபாடு செய்துள்ளோம். - என்றனர்.

இதேவேளை இது தொடர்பாக அரசாங்க அதிபர் ஜே.ஜே. முரளீதரன் தெரிவிக்கையில் -

கடந்த 15 ஆம் திகதி விவசாயி ஒருவர் கச்சேரிக்கு வருகைதந்து தான் செய்த வயல் நிலங்கள் அண்மையில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தம் காரணமாக பாதிக்கப்பட்டுள்ளதாக புகைபடங்களைகாண்பித்தார். இருந்தபோதும், ஜனவரி 20 ஆம் திகதி அறுவடை தினமாக கூட்டத்தின் போது தீர்மானம் எடுக்கப்பட்டது.





ஆனாலும் அதற்கு ஒரு சில தினங்களுக்கு முன்னர்வந்து தமது வேளாண்மை அழிவடைவதாகவும் உடனடியாக அறுவடை செய்யாவிட்டால் பாரிய நஷ்டத்தை எதிர் நோக்க வேண்டியுள்ளதாகத் தெரிவித்தார்.

எனவே அனர்த்தநிலமையை கருத்தில் கொண்டு அவருக்கு இதனால் பாரிய நஷ்டம் ஏற்படுமாக இருந்தால், நீங்கள் உங்களுடைய வயலை மட்டும் அறுவடை செய்யலாம் அதுவும் பிரதேச செயலாளர் மற்றும் செயலகத்தில் சேவையாற்றும் விவசாய போதனாசிரியர் ஆகியோரின் மேற்பார்வையில் செய்யலாம் என தெரிவித்து அனுப்பிவைத்தேன்.

நஷ்ட ஈடு வழங்கினாலும் அது அரசாங்கத்துக்குதான் பணநஷ்டம் ஏற்படும். எனவே அவர் ஒருவரது தனிப்பட்ட விடையத்துக்கு அனர்த்த நிலைமையை கருத்தில் கொண்டு எடுக்கப்பட்டது. இது பொதுவான அறிவித்தல் அல்ல விவசாய கூட்டத்தில் 20 ஆம் திகதி அறுவடை என எடுக்கப்பட்ட தீர்மானம் மாற்றப்படவில்லை. இது தொடர்பாக பல விவசாய அமைப்புக்கள் வருகைதந்து, ’இது போன்ற விடயங்களை எங்களால் கவனிக்க முடியும். இது ஒருதனிப்பட்ட விடயம் என்பதால் எங்களுடைய பிரதேசத்தில் இப்படி ஏற்பட்டால் நாங்கள் சென்று பார்த்து, அதற்குரிய நடவடிக்கை எடுப்போம். இது தொடர்பாக மாவட்ட செயலகத்துக்கு சென்று முறையிடத் தேவையில்லை’ என கூறிச் சென்றனர் என அவர் தெரிவித்தார்.

உங்கள் கனவை நனவாக்க ...!

NVQ Level 3 & 4 Courses

புதிய பிரிவுகள் ஆரம்பம் 22.01.2025

கற்கும் போதே தொழில் ஆற்றக் கூடிய வாய்ப்பு



- CARE GIVER COURSE (பராமரிப்பாளர் பயிற்சி)
- NURSE ASSISTANT COURSE (தாதிய உதவியாளர் பயிற்சி)

கற்கைநெறி மொழி:ஆங்கிலம்/தமிழ்
இந்த கற்கைநெறி முடிவடைந்தவுடன் 3 மாதங்கள் பயிற்சி வழங்கப்படும்

தகுதி:
- வயது 16 அல்லது அதற்கு மேற்பட்டவர்கள்
- ஆங்கிலத்தில் அடிப்படை அறிவு
- GCE O/L இல் குறைந்தது 05 பாடங்களில் தேர்ச்சி

JDR HEALTH CARE (PVT) LTD
JDR PARAMEDICAL ACADEMY

340, Pointpedro Road, Jaffna.
தொடர்பு:070 7070 722

# சிலைடா பாலர் பாடசாலையின் 35 ஆவது ஆண்டு நிறைவு விழா

(தில்சாத் பர்வீஸ்)

சம்மாந்துறையில் அனுபவம் வாய்ந்த கல்வி நிறுவனமான சிலைடா பாலர் பாடசாலை தனது 35ஆவது ஆண்டு நிறைவு விழாவை பாடசாலையின் ஆசிரியர் ஏ.ஜாஹிறா அவர்களின் தலைமையில் வெள்ளிக்கிழமை சம்மாந்துறை சிலைடா பாலர் பாடசாலை வளாகத்தில் கொண்டாடியது.

இந்நிகழ்வில் பாடசாலையின் மாணவர்களால் கலை நிகழ்ச்சிகள் வழங்கப்பட்டு மாணவர்களுக்கு நினைவுச் சின்னங்கள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப் பட்டன.

அத்துடன் மாணவர்களை கல்வியால் வளப்படுத்திய ஆசிரியர்களுக்கு கௌரவ நினைவுச் சின்னங்கள் வழங்கப் பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில், சம்மாந்துறை சுவீஸ் கோல் ஹவுஸ் பணிப்பாளர் ஏ.எம். இஸ்ஹாக் மற்றும் சுவீஸ்ஜுவல்ஸ் பணிப்பாளர் ஏ.எம். இஸ்பாக், சம்மாந்துறை அல் முனீர் அதிபர் ஏ. ரஹீம், சமூக சிப்பிகள் நிறுவனத்தின் கள உத்தியோகத்தர் எம்.எச். எம். சியான், சிலைடா பாலர் பாடசாலையின் ஆசிரியர் ஏ.கே. றுக்ஸானா, ஏ. நுஸ்றத்பாணு என பலரும் கலந்து கொண்டனர்.





# வெள்ள அனர்த்தத்தால் விவசாயிகள் புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் பாதிப்பு

## நிலைமைகள் குறித்து ஆராய்ந்தார் ரவிகரன் எம்.பி.



முல்லைத்தீவு-புதுக்குடியிருப்பு பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட உடையார்கட்டு, வள்ளிபுனம், தேவிபுரம் பகுதிகளில் வெள்ள அனர்த்தத்தத்தால் பாதிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் அப்பகுதி கமக்கார அமைப்புக்களின் அழைப்பையேற்று குறித்தவிவசாய நிலங்களை வன்னிநாடாளுமன்ற உறுப்பினர் துரைராசரவிகரன் நேரில் சென்று பார்வையிட்டுள்ளார்.

அந்தவகையில் உடையார்கட்டு கமநலசேவைநிலையப் பிரிவிற்குட்பட்ட, உடையார்கட்டுக்குளத்தின்கீழ்பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்ட 1800 ஏக்கர் நெற்பயிற்செய்கையில் பெருமளவான வயல் நிலங்கள் அறுவடைக்காகத் தயாராக இருந்தநிலையில் வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டுள்ளது.

அதேபோல் வள்ளிபுனம் இடைக்கட்டுக் குளத்தின் கீழ் செய்கைபண்ணப்பட்ட 175 ஏக்கர் பெரும்போக நெற்செய்கை மற்றும், தேவிபுரம் (அ) பகுதி காளிகோவில் வெளியில் செய்கைபண்ணப்பட்ட 66 ஏக்கர் பெரும்போக நெற்பயிர்ச்செய்கைகளில் பெருமளவான வயல்நிலங்களும் அறுவடைக்குத் தயாரானநிலையில் வெள்ள அனர்த்தத்தால் அழிவடைந்துள்ளன.

இதனால் அப்பகுதி விவசாயிகள் பலத்த இன்னல்களுக்கு முகங்கொடுத்துள்ளனர்.

இந் நிலையில் தமது பாதிப்பு நிலைதொடர்பில் இதுவரையில் உரிய தரப்பினர்கள் எவரும் வருகைதந்து பார்வையிடவில்லை என விவசாயிகளால் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரனிடம் முறையிடப்பட்டதுடன், வெள்ள அழிவிற்கான நிவாரணங்களைப் பெற்றுத்தர நடவடிக்கை எடுக்குமாறும் விவசாயிகளால் கோரிக்கை விடுக்கப்பட்டது.

இந் நிலையில் விவசாயிகளின் பிரச்சினைகளைக் கேட்டறிந்த நாடாளுமன்ற உறுப்பினர், இது தொடர்பிலான கோரிக்கைக்கடிதங்களைத் தம்மிடம் கையளிக்குமாறு விவசாயிகளிடம் கேட்டுக்கொண்டதுடன், உரியதரப்பினருடன் பேசி விவசாயிகளுக்குரிய இழப்பீடுகளைப் பெற்றுக்கொடுக்கநடவடிக்கைஎடுக்கப்படும் எனத் தெரிவித்தார்.





# குளத்திலிருந்து ஆணின் சடலம் புங்குடுதீவில் மீட்பு

யாழ்ப்பாணம் புங்குடுதீவு பகுதியில் உள்ள குளம் ஒன்றிலிருந்து நேற்று (சனிக்கிழமை) ஆணொருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

அப்பகுதியை சேர்ந்த 38 வயதுடைய நபரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இவர் கடந்த இரண்டு நாள்களுக்கு முன்னர் வீட்டில் இருந்து வெளியே சென்றுள்ள நிலையில் மீண்டும் வீடு திரும்பாமல் இருந்துள்ளார்.

இதனால் இவரது உறவினர்கள் இவரை தேடும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

இந்நிலையில், இவர் நேற்று அப்பகுதியில் உள்ள குளம் ஒன்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த குளத்திற்கு அருகிலிருந்து இவரது சைக்கிள் மற்றும் ஆவணங்கள் என்பவை பொலிஸாரால் மீட்கப் பட்டுள்ளன.

இது தொடர்பில் ஊர்காவற்துறை பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.





# நெல் கொள்வனவு நியமம் குறித்து கூட்டுறவுத்துறையினர் கலந்தாய்வு

வடக்கு கூட்டுறவு அபிவிருத்தி வங்கியின் தொழில்நுட்ப பிரிவின் ஏற்பாட்டில் நெல் கொள்வனவின் போது கவனத்தில் கொள்ள வேண்டிய நியமங்களை நிர்ணயிப்பதற்கான கலந்தாய்வு என்ற தலைப்பில் கலந்துரையாடல் வடக்கு கூட்டுறவு அபிவிருத்தி வங்கியின் தொழில் நுட்ப பிரிவின் ஏற்பாட்டில் கடந்த புதன்கிழமை யாழ்மாவட்ட கூட்டுறவு சபை மண்டபத்தில் நெல் கொள்வனவின் போது கவனத்தில் கொள்ள வேண்டிய நியமங்களை நிர்ணயிப்பதற்கான கலந்தாய்வு என்ற தலைப்பில் கலந்துரையாடல் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் வடக்குமாகாணத்தில் பெரும்போக நெல் கொள்வனவில் ஈடுபடும் பல்நோக்கு கூட்டுறவு சங்கங்கள், விவசாய கூட்டுறவு சங்கங்கள், கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கூட்டுறவு உதவி ஆணையாளர்களது பங்கேற்புடன் இடம் பெற்றது .

இந்த கலத்துரையாடலுக்கு வளவாளராக கலந்து கொண்ட திரு ரா.சஞ்சீவன் (பிரதிப்பணிப்பாளர் விதை மற்றும் நடுகைப்பொருள் அபிவிருத்தி நிலையம் )கருத்து தெரிவிக்கையில் -

சிவப்பு அரிசிக்கான தட்டுபாடு செயற்கையாய் உருவாகுவதை தடுப்பதற்கும் சிறு குறு நில விவசாயிகளுக்கு நன்மைமை பயக்கும் நோக்கோடும் கூட்டுறவு சங்கங்கள் நெல் கொள்வனவில் ஈடுபடுதலை வரவேற்க வேண்டும் .எனினும் வடக்கில் அதிகளவாக காணப்பட்ட நெல் நோய் தாக்கத்தாலும் சீரற்ற கால நிலையாலும் நெல்லின் தரம் சற்று பாதிப்படைந்து காணப்படுகிறது .பொதுவாக அறுவடைக்கு முற்றிய நெல்லின் ஈரப்பதன் 30 வீதம் குறைவாக காணப்பட வேண்டும் , களஞ்சியபடுத்தும் போது அதன் ஈரப்பதன் 13 வீதம் குறைவாக காணப்பட வேண்டும், நெல்லின் இனத்தூய்மை 98 வீதம் அதிகமாக காணப்பட



வேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

மேலும் கூட்டுறவு சங்கங்களிடம் அதிகளவான களஞ்சியங்களை சரியான பராமரிப்பு இன்றி காணப்படுவதாகவும் அவற்றை சரியான நியமங்களுக்கேற்ப பராமரித்தால் களஞ்சியத்தில் ஏற்படும் அறுவடைக்கு பிந்திய இழப்புகளை குறைக்க முடியும் எனவும் குறிப்பிட்டார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த வடக்கு கூட்டுறவு அபிவிருத்தி வங்கியின் நிறைவேற்று பணிப்பாளர் -

வங்கியின்முழுபங்களிப்பால்விசுவமடுவிவசாயிகள் கூட்டுறவு சங்க ஆலையின் உலர்த்தி மீண்டும் பயன்பாட்டிற்கு கொண்டுவரபட்டுள்ளதாகவும் சங்கங்கள் ஈர நெல்லை கொள்வனவு செய்து உலர்த்தி மூலம் உலர்த்த முடியும் எனவும் தெரிவித்தார்.

இறுதியாக இறுதியுரை வழங்கிய வடக்கு கூட்டுறவு அபிவிருத்தி வங்கியின் செயலாளர் செல்வரட்ணம் வேதவல்லி தெரிவிக்கையில் -

எமது வங்கியின் தலைவர் எமக்கு அடிக்கடி தெரிவிப்பது போல் இலங்கை தற்போது எதிர்கொண்டுள்ள நெருக்கடிக்கு மத்தியில் அரிசியானது எமது உணவுப் பாதுகாப்பிற்கு முக்கியமானதொன்றாகும் என வலியுறுத்தினார். அரிசிநாட்டுக்கு போதுமான அளவுஉற்பத்தியாகின்ற போதிலும் அதனை விநியோகிப்பதில் உள்ள பிரச்சினையால் மக்களுக்கு உரிய முறையில் சென்றடையாமல் உள்ளது. இந்த பின்னணியில் தான் கூட்டுறவு முக்கியமான சமூக நிறுவனமாக உள்ளது.

கூட்டுறவால் விவசாயிகளின் வாழ்வாதாரத்தில் விஸ்திரப்டுத்துவதுடன் உணவு பாதுகாப்பிற்காக உணவுவிநியோகம்செய்யும்பொதுநிறுவனமாகவும் தொழிற்படும். கூட்டுறவால் அரிசியின் விலையை சந்தையில் தீர்மானிக்கும் சக்தியாகவும் மாறமுடியும் என வேதவல்லி செல்வரட்ணம் வலியுறுத்தினார்.

வடக்கு கூட்டுறவு அபிவிருத்தி வங்கி வரப்புயர கடன் மூலம் விவசாயிகளுடன் தொடர்பில் உள்ளது. 6 வருடத்திற்கு முதல் செய்த வடக்கு கூட்டுறவுகளின் அரிசி ஆலைகள் தொடர்பான ஆய்வு இங்குள்ள 16 கூட்டுறவுகளின் அரிசி ஆலைகளும் முழு திறனில் இயங்குமானல் 10,000 மெற்றிக் தொன் நெல் அடிக்கலாம் என தெரிவித்தார்.

அரசாங்கம் தேசிய உற்பத்தியில் 10 வீத கொள்வனவு செய்ய தீர்மானித்துள்ளது. இந்நிலையில் வடக்கில் கூட்டுறவும் இந்த பாதையில் இணைந்து நெல் கொள்வனவில் ஈடுபடவேண்டும். -என்றார்.




# தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கையம்மன் கோவிலில் தேசிய பொங்கல் விழா நிகழ்வு கோலாகலம்

யாழ்ப்பாணம் தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கையம்மன் கோவிலில் தேசிய பொங்கல் விழா நேற்று (சனிக்கிழமை) வெகு விமர்சையாக கொண்டாடப்பட்டது.

இதில் பௌத்த சாசன மற்றும் மத விவகார அமைச்சர் சுனில் செனவி, கடல் தொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், அமைச்சர் சரோஜா போல் ராஜ், பிரதி அமைச்சர் கமகதர திசாநாயக்க, பெருந்தோட்ட மற்றும் சமூக கட்டமைப்பு பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப், தேசிய மக்கள் சக்தியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான க. இளங்குமரன், ஸ்ரீபவானந்தராஜா, லயன் ஜெயசந்திரமூர்த்தி ரஜீவன் உள்ளிட்டோர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

பொங்கல் நிகழ்வு தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தில் காலை 7.30 மணிக்கு இடம்பெற்று நிறைவுற்றதும், அங்கிருந்து மதத் தலைவர்கள் அரசியல் பிரமுகர்கள் தமிழர் பாரம்பரிய கலை நிகழ்வுகள் சகிதம் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தில்இருந்துவீதியெங்கள்விழாக்கோலம் பூண தெல்லிப்பழை யூனியன் கல்லூரியைச் சென்றடைந்து, தமிழர் பாரம்பரிய கலை அரங்க நிகழ்வுகள் நடைபெற்றன.





இந்த நிகழ்வை இந்துகலாசார அமைச்சுடன் இணைந்து யாழ்ப்பாண மாவட்ட செயலகம், தெல்லிப்பழை பிரதேச செயலகம் என்பன சிறப்பான முறையில் ஒழுங்கமைப்புச் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஊடகத்திற்கு பொறுப்பான உதவி மாவட்ட சாரண ஆணையாளர்கள் செயல் அமர்வு

(றிபாஸ்)

இலங்கை சாரணர் சங்கத்தின் ஏற்பாட்டில் ஊடகத்திற்கு பொறுப்பான உதவி மாவட்ட சாரண ஆணையாளர்களுக்கான ஒரு நாள் செயலமர்வு கொழும்பு தலைமைக் காரியாலயத்தில் நேற்று(சனிக்கிழமை) நடைபெற்றது.

தலைமைக் காரியாலய பிரதி, உதவி ஆணையாளர்களால் நடத்தப்பட்ட இச்செயலமர்வில் பல்வேறு மாவட்டங்களிலிருந்து ஊடகத்துக்கு பொறுப்பான ஆண், பெண் உதவி சாரண ஆணையாளர்கள் கலந்து கொண்டு பயிற்சிகளை பெற்றுக் கொண்டனர்.












இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 19.01.2025இல் வெளியிடப்பெற்றது